janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 டிசம்பர் 24 - டிசம்பர் 30 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 38




## ◆ நாடாளுமன்றத்திற்குள் வண்ணப்புகை குப்பி வெடிப்பு!
## ◆ 142 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம்!

# மோடியின் ஜனநாயகம்!

**நாட்டில் வேறெங்கும் காண முடியாத உயரிய பாதுகாப்பை பெற்றது நமது நாடாளுமன்றம். பழைய நாடாளுமன்ற கட்டிடம் வேண்டாம் என்று புதிய நாடாளுமன்ற கட்டிடம் கட்டப்பட்டது. இந்த கட்டிடம் பழையதை விட பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட கட்டிடம் என்றார்கள்.**

இதில் பல்லடுக்கு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. நூற்றுக்கு நூறு சதவீதம் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது என்றும் சொன்னார்கள்.

நாடாளுமன்றத்தையும், அங்கு வருகை தரும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக 1500 மத்திய பாதுகாப்பு படை கமாண்டோக்கள் கொண்ட நாடாளுமன்ற பாதுகாப்பு அணி உருவாக்கப்பட்டு, அதுவும் செயல்பட்டு வருகிறது.

இவை மட்டுமின்றி நாடாளுமன்றத்துக்கு வெளியில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்த, டெல்லி காவல்துறையும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சாதாரணமாக யாரும் அந்தக் கட்டடத்துக்குள் நுழைந்து விட முடியாது. யாராக இருப்பினும் கடும் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பிறகுதான் நாடாளுமன்ற வளாகத்துக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள் என்பது எல்லோரும் நன்கு அறிந்ததே!

நாடாளுமன்ற உறுப்பினர் யாராவது பரிந்துரை செய்யாவிட்டால் அந்தக் கட்டடத்துக்குள் நுழைவது சாத்தியமே அல்ல. கைபேசி, செருப்பு, பேனா, சில்லறை காசுகள் உட்பட எதனையும் நாடாளுமன்றத்திற்குள் செல்லும்போது பார்வையாளர்கள் எடுத்துச் செல்ல முடியாது.

ஒவ்வொருவரும் மெட்டல் டிடக்டர் மூலம் முழு உடல் பரிசோதனை செய்த பின்னரே, வரவேற்பறையில் இருந்து வளாகத்திற்குள் செல்ல முடியும்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற கட்டடத்தில் நுழையும் போது மீண்டும் ஒரு முழு உடல் பரிசோதனை செய்யப்படும். பார்வையாளர் மாடத்திற்கு செல்லும் முன்னர் மூன்றாவதாக ஒரு சோதனையும் உண்டு.

இத்தனை பிரமிக்கத்தக்க, பிரமாண்டமான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்ட நுழைவாயிலுக்குள், ஈ, எறும்பு கூட செல்ல முடியாத பெரும் பாதுகாப்பை பெற்றுள்ள நாடாளுமன்றத்திற்குள், அனைத்தையும் தவிடு பொடியாக்கி இரு இளைஞர்கள் பார்வையாளர்கள் மாடத்திற்குச் சென்றிருக்கிறார்கள்.

அங்கிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் மேசை மீது குதித்தார்கள் என்றால் அதனை சாதாரணமாக கடந்து



போக முடியுமா?

காலிஸ்தான் பயங்கரவாதி என கூறப்படும் குர்பத் வந்த்சிங் பன்னூ என்பவர் சில வாரங்களுக்கு முன், அமெரிக்காவில் இருந்தபடி 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் தேதி தான் நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டும் அதே நாளில் தாக்குதல் நடத்துவோம் என பகிரங்கமாக அறிவித்து இருந்தார். அந்த செய்தி அனைத்து ஊடகங்களிலும் வெளியானதை எவரும் மறந்திருக்க இயலாது.

அவர் கூறியபடியே 2023 டிசம்பர் 13ஆம் நாள் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவம் நாட்டையே அதிர்வலைக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இந்தச் சம்பவத்துக்கும் காலிஸ்தான் தீவிரவாதிகள் அறிவிப்புக்கும் தொடர்பு உண்டா, இல்லையா? என்பதல்ல பிரச்சனை.

காலிஸ்தான் தீவிரவாதியின் அறிவிப்புக்கு பின்னர் நாடாளுமன்ற பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டதாக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ள செய்திகளும் ஊடகத்தில் வந்தன.

முன்கூட்டியே இவ்வாறு நடக்கும் என்று அறிவிக்கப்பட்ட நிலையிலும் கூட, பலப்படுத்தப்பட்ட பாதுகாப்புகள் அனைத்தையும் கடந்து டிசம்பர் 13ஆம் நாள் நாடாளுமன்றத்திற்குள் இருவர் குதித்தது வியப்பாக உள்ளது.

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

## எதேச்சதிகாரத்தின் உச்சம்

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சி உறுப்பினர்கள் இடைநீக்கம் எதேச்சதிகாரத்தின் உச்சம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாகட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

13.12.2023 அன்று நாடாளுமன்ற மக்களவைக்குள் வெடித்து வெளிப்படும் வண்ணப் புகைக் குப்பிகள் வீசப்பட்டன. இதனையொட்டி நாடாளுமன்ற பாதுகாப்பு ஏற்பாட்டின் படுதோல்வி வெளிப்பட்டது.

கர்நாடக மாநிலத்தின் மைசூரு பகுதி நாடாளுமன்ற உறுப்பினரின் பரிந்துரையில், மக்களவை பார்வையாளர் மாடம் சென்று உள் நுழைந்தவர்கள் வண்ணப் புகைக் குப்பிகளோடு சென்றது எப்படி? என்ற வினாவிற்கு இதுவரை விடை கிடைக்கவில்லை.

பாதுகாப்பு ஏற்பாட்டில் ஏற்பட்ட படுதோல்விக்கு யார் காரணம் என்பதை உள்துறை அமைச்சர் நாட்டுக்கு தெரிவிக்க வேண்டும் என அவைத் தலைவர்களிடம் முறையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 15 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர். நாடாளுமன்ற நடைமுறைகளில் அனுமதிக்கப்பட்ட உரிமைகளை பறித்து, ஜனநாயகப் படுகொலை செய்த ஜனநாயக விரோத செயலுக்கு நியாயம் கேட்ட எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை 142 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டிருப்பது எதேச்சதிகாரத்தின் உச்ச கட்டமாகும்.

சட்ட நெறிமுறைகள், ஒப்புக் கொள்ளப்பட்ட ஜனநாயக மாண்புகள், வழிவழியாக பின்பற்றப்படும் மரபுகள் அனைத்தையும் நிராகரிக்கும் மிக மோசமான பாசிச வகைத் தாக்குதலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. எதிர்க்கட்சிகள் இன்றி, ஆளும்கட்சி மட்டுமே பங்கேற்கும் நாடாளுமன்றத்தை நடத்திட பாஜக அரசு மேற்கொண்டுள்ள முயற்சி ஒரு கட்சி ஆட்சி முறையை மேற்கொள்ளும் பாஜக ஒன்றிய அரசின் சர்வாதிகார செயலை கண்டித்து நாடு ஒன்றுபட்டு கிளர்ந்தெழுந்து போராட முன் வர வேண்டும் என்றும் அறைகூவி அழைக்கிறது என கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்துள்ளார்.

கட்சிக் கடிதம்

# புரட்சிகர பணிகளைத் தொடர வேண்டும்



போர்க்குணமிக்க தோழர்களே!

**நாம் அங்கம் வகிக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது 98 ஆண்டு காலத்தை நிறைவு செய்து, 99 ஆம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் இந்த நன்னாளில் சந்திக்கின்றோம்.**

ஆம் 1925 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் கான்பூர் நகரில் புதியதோர் இயக்கம் தொடங்குவதற்கான முதல் மாநாடாக தொடங்கியது.

சிந்தனை சிற்பி சிங்காரவேலர் தலைமை உரையுடன் அன்றைய நாள் கொடியேற்றுதல், வரவேற்புரை என முதல் மாநாடு வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

அடுத்த நாள் டிசம்பர் 26 இல் கட்சிக்கு என்ன பெயர் சூட்டுவது என்று விவாதித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என பெயர் சூட்டப்பட்டது.

கட்சியின் முடிவின் அடிப்படையில் கட்சியின் அமைப்பு தினமாக ஆண்டுதோறும் டிசம்பர் 26ஆம் நாளை அமைப்பு தினமாக பின்பற்றி வருகின்றோம்.

98 ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன. இத்தனை ஆண்டுகளில் உங்கள் கட்சி சாதித்தது என்ன? என்ற கேள்வியை பலர் எழுப்புகின்றனர்.

அவ்வாறு வினா எழுப்புபவர்கள் சாதனை என்று கருதுவது நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல் வெற்றிகள் மற்றும் ஆட்சி அதிகார பீடத்தில் அமர்வது இதனைதான். சாதனை என கருதி வினா எழுப்புகின்றார்கள். பலர் உண்மையாய் கவலைப்பட்டு நல்ல கொள்கையும், நல்ல நேர்மையான தோழர்களை கொண்ட கட்சி ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தால் நல்லது நடக்குமே! என்கிற நல்லெண்ண விருப்பத்தை தெரிவித்து வருகின்றனர்.

1952 முதல் பொதுத் தேர்தலில் சென்னை மாகாணத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் தலைமையில் அமைந்த கூட்டணியும் மகத்தான வெற்றி பெற்றது. ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றது.

கம்யூனிஸ்ட் தலைமையில் ஆட்சி அமைந்திட கூடாது என்று கொல்லைப்புற வழியாக ராஜாஜி முதலமைச்சராக்கப்பட்டார் என்பதனை இன்றைய இளம் தலைமுறைக்கு எடுத்து கூறிட வேண்டும்.

கேரளத்தில் தோழர் இ. எம். எஸ். நம்பூதிரிபாட் தலைமையில் (முதல்வர்) ஆட்சியும் அமைக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியாக விளங்கியது.

நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களில், சட்டப்பேரவைகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இருந்தார்கள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிராகரிக்கப்பட முடியாத மகத்தான பேரியக்கமாக விளங்கியது.

வர்க்க, வெகுஜன அமைப்புக்கள் அனைத்தும் கம்பீரமாக செயல்பட்டன. கலை இலக்கிய அமைப்புகள், கலை குழுக்கள், நாடகக் குழுக்கள் என நாட்டையே குலுக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விளங்கியது.

கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சனைகள் ஜனநாயக மத்தியத்துவ கோட்பாடுகள் அப்பட்டமாக மீறப்பட்டன. சிறுபான்மை குழு ஒன்று வெளியேறி தனிக்கட்சி காணப்பட்டது.

நம்மைக் கண்டு அஞ்சி நடுங்கிய கூட்டம், சந்தர்ப்பம் எப்போது வரும் என காத்திருந்த கூட்டம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்கிற அந்த மகத்தான பெயரை நீக்கி வலது, இடது என பெயரிட்டு நம்மை அசிங்கப்படுத்திட முற்பட்டன.

தொழிலாளி வர்க்கத்தின் நம்பிக்கை நட்சத்திரமான ஏ. ஐ. டி. யு .சி. அமைப்பை மார்பை பிளப்பது போன்று பிளந்தனர்.

சுரண்டும் கூட்டத்தின் வாயில் கொம்புத்தேன் ஊற்றியது போன்று அமைந்தது.

அனைத்து வர்க்க – வெகுஜன அமைப்புகளும் பிளவு பட்டன. தமிழ்நாட்டில் தஞ்சை தரணியில் பெரும் சக்தியாக, எதனையும் எதிர்கொள்ள கூடிய மாபெரும் அமைப்பாக விளங்கிய விவசாய தொழிலாளர் சங்கம் பிளவு பட்டது. இந்த கொடுமைக்கு பின்னரே, பெரும் கொடுமையாக கீழ்வெண்மணி சம்பவம் நிகழ்ந்தது.

கம்யூனிஸ்ட்




இயக்கத்தில் ஏற்பட்ட மிகப் பெரும் பின்னடைவுக்கு காரணம் என்பது எதார்த்தமான உண்மை. இதனை தற்சமயம் மறுக்கலாம் அல்லது பிளவு பட்டதால்தான் கம்யூனிஸ்ட் இயக்கம் உயிருடன் இருக்கிறது. இல்லையென்றால் செத்து மடிந்து இருக்கும் என்று , செய்திட்ட பெரும் தவறுக்கு நியாயம் கற்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

இவைகளில் எது சரி, எது தவறு இனி என்ன செய்தால் நாட்டிற்கும், உழைக்கும் மக்களுக்கும் நல்லது? என்பதனை காலம் தீர்மானிக்கட்டும். அது வரை காத்திருப்போம்.

ஆனால் அதே வேலையில் கம்யூனிஸ்டுகளின் தியாகத்தை, அதனால் ஏற்பட்ட சாதனைகளை எவராலும் நிராகரிக்க முடியாது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோன்றுவதற்கு முன்னரே, காங்கிரஸ் கட்சி தொடங்கப் பெற்று நாட்டின் விடுதலைக்காக போராடியது என்றாலும், பரிபூரண விடுதலை என்கிற மகத்தான முழக்கத்தை தான் பிறந்த போதே முன்வைத்த கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தான் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இன்று நாட்டில் எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. தேசிய கட்சிகள், மாநில கட்சிகள், பகுதி கட்சிகள் என பலப் பல உள்ளன. மேலும் புதிதாக கட்சிகள் தொடங்கவும் கூடும்.

ஆனால் எந்தக் கட்சிக்கும் ஏற்படாத நெருக்கடி, தடை, அடக்குமுறை கொடுமைகள் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சந்திக்க வேண்டியவை ஏன் ஏற்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு முன்பு தொடங்கப்பட்ட காங்கிரஸ் மற்றும் பிற அமைப்புகள் மீது சதி வழக்கு தொடுக்காத வெள்ளையர் அரசாங்கம். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கிய நாளிலேயே செய்ய காரணம் என்ன?

நாட்டிற்கு விடுதலை வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கூறியது. பரிபூரண விடுதலை வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கோரியது.

காங்கிரஸ் கட்சியால் தங்கள் ஆட்சிக்கு ஆபத்து இல்லை என்று வெள்ளையர் அரசாங்கம் கருதியது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியினால் தங்கள் ஆட்சிக்கு ஆகப் பெரும் ஆபத்து என கருதினார்கள். எனவே சதி வழக்கு போட்டார்கள்.

குழந்தை பிறந்த போது பச்சிளம் சிசு என்று கூட பாராமல் அதன் கழுத்தை நெரித்து தனது கோர கரங்களால் கொல்ல முற்பட்டது வெள்ளையர் அரசாங்கம்.

அதன் முயற்சி வெற்றி பெறவில்லை மாறாக, வெள்ளையர்களின் கொடூரமான கொடிய அடக்குமுறைகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்கொண்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் தலைமறைவாகஇருந்துகொண்டுவெள்ளையர் அரசுக்கு எதிரான போராட்டத்தை தீவிரமாக மேற்கொண்டார்கள்.

சிறைச்சாலைக்குள் இருந்தும் போராடினர். அரசுக்கு எதிராகவும், சிறையில் நடைபெறும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும், சிறைச் சீர்திருத்தம் வேண்டும் என்பதற்காகவும் போராடினார்கள்.

நாட்டின் விடுதலைக்கான போரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பை, தியாகத்தை எவராலும் நிராகரிக்க இயலாது, முடியாது.

நாட்டில் அனைத்து சிறை சாலைகளிலும் உள்ள ஒவ்வொரு செங்கல்லும், அதன் ஜன்னல் கம்பிகளும் கம்யூனிஸ்டுகளின் தியாக வரலாற்றை எடுத்துக் கூறும்.

விடுதலைக்காக மட்டுமல்ல,சமூக அடக்குமுறை கொடுமைகளுக்கு எதிராக வீர சமர் புரிந்தவர்கள் கம்யூனிஸ்டுகள்.

நாடு முழுவதும் ஜமீன்தார்கள், பண்ணையார்கள், தர்மகர்த்தாக்கள் என கொடிகட்டி பறந்தபோது. அவர்களின் அத்துமீறல்களுக்கு, அராஜகங்களுக்கு எதிராக நேரடியாக களம் கண்டவர்கள் கம்யூனிஸ்டுகள்.

நில பிரபுத்துவ கொடுமை என்பது வெள்ளை அரசின் கொடுமையை விட கொடியது. அதனை எதிர்கொள்வது என்பது அவ்வளவு எளிதல்ல, அதனால்தான் மற்றவர்கள் ஓரமாக ஒதுங்கிக் கொண்ட நிலையிலும் அல்லது அறிக்கைகள் மூலம் தங்கள் இருப்பை வெளிப்படுத்திய நிலையிலும், எத்தகைய தியாகத்திற்கும் தயார் என்று நேரடியாக களம் கண்டவர்கள். ரத்தம் சிந்தியவர்கள் கம்யூனிஸ்டுகள் என்பதை எவரும் மறுத்திர இயலாது.

தொழிலாளர்கள் நலன், அவர்களுக்குரிய சட்டங்கள், விவசாயிகளின் நலன், நில உச்சவரம்பு சட்டம், பெண்கள் உரிமைகள், நலன்கள், அனைவருக்கும் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு, வேலையில்லாக் கால நிவாரணம் என அனைத்து பகுதி மக்கள் நல்வாழ்வுக்காக களம் கண்ட இயக்கம். பல வெற்றிகளை, சாதனைகளை கண்ட இயக்கம். இன்றும் தனது வீரமிக்க போராட்டங்களை தொடர்கின்றது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

# வெண்மணி தியாகிகளுக்கு வீரவணக்கம்!

**தமிழ்நாட்டில் உழைப்போர் அடக்குமுறை, சாதிய அடக்குமுறை தலைவிரித்தாடியது. அதில் ஒன்று தான் வெண்மணி கிராமத்தில் 1968 டிசம்பர் 25ல் வெளிப்பட்டது.**

உழவுத் தொழிலின் உயிர்நாடியாககள் – விவசாயத் தொழிலாளர்கள் – தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான காவிரி பாயும் புண்ணிய பூமியில், பெற்று வந்த, கூலியில் ஒரு அரைப்படி நெல் சேர்த்துக் கொடுங்கள் என்று கோரிக்கை வைத்தனர்.

அதிகராச் செருக்கும், ஆணவமும் தலைக் கேறிய நிலபிரபுத்துவம், மனித வேட்டையாடும் வெறியோடும், கொலைக் கருவிகளோடும் வெண்மணி கிராமத்தில் தாண்டவம் ஆடியது.

அடிமை சங்கிலியை அறுத்து, நிலபிரபுத்துவக் கோட்டைகளை தகர்க்க செங்கொடி இயக்கத்தை கட்டியமைக்கும் பணியை விடுதலைப் போராட்ட வீரர், தியாக சீலர் பி.சீனிவாசராவ் தஞ்சை மாவட்டத்தில் தொடங்கினார். செங்கொடி இயக்கத்தில் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஒருசேர, ஒரே அமைப்பில் அணிதிரட்டப்பட்டனர்.

அடிமைப்பட்ட மக்களுக்கு விடியல் தந்த சூரியனாக, உயிர் காக்க வந்த காவல் தெய்வமாக கிராமங்கள் தோறும் செங்கொடிகள் பறந்தன. உழுபவருக்கே நிலம் என்ற உரிமை முழக்கம் விண்ணதிர எழும்பியது.

தொடர்ந்து குடிமனைக்கான போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குத்தகை என்கிற பெயரில் விளைந்ததை முழுவதும் அள்ளிச் செல்லும் முறைக்கு எதிரான கோரிக்கை வைக்கப்பட்டது.



குத்தகைக் குறைப்புக்கான போராட்டம், கூலி உரிமைப் போராட்டம் எனப் போராட்டங்கள் திசையெட்டும் தீவிரமாக பரவிப் படர்ந்து நடந்தன. 1968 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் முழுவதும் கூலியில், அரைப்படி நெல் அதிகரித்து தர வேண்டும் எனக் கோரி நடைப்பெற்றது.

நெல் உற்பத்தியாளர் சங்கம் உருவாக்கப் பட்டது. இதன் கிளைகள் மாவட்டம் முழுவதும் பல இடங்களில் தொடங்கி விவசாயத் தொழி லாளர்கள் மீது மூர்க்கத்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டது.

சட்டத்தை கையில் எடுத்துக் கொண்ட வன்முறை கும்பலுக்கு, இரிஞ்சியூர் கோபாலகிருஷ்ண நாயுடு தலைமை தாங்கி செயல்பட்டார்.

அரைப்படி நெல் கூடுதலாக கூலி கொடுக்க நெல் உற்பத்தியாளர் சங்கத்தினர் மறுத்தனர்.

தன்னிடம் கைகட்டி வாய் பொத்தி அடிமையாய் இருந்தவர்கள் நம்மை எதிர்க்க துணிந்து விட்டார்களே என்று எண்ணிய இரிஞ்சியூர் கோபாலகிருஷ்ணனும், அவரது அடியாட்களும், குண்டர்களும், 1968 டிசம்பர் 25 அன்று கீழ வெண்மணியில் விவசாய தொழிலாளர்கள் மீது நேரடித் தாக்குதலை நடத்தினர். அது நள்ளிரவு வரை நீடித்தது.

பச்சிளம் குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என 44 விவசாயத் தொழிலாளர்கள் ராமையாவின் குடிசையில் தஞ்சமடைந்த போது, அவர்களை உள்ளே வைத்து வெளியில் பூட்டி குடிசைக்கு தீ வைத்து கொளுத்தி, தீயில் அங்கம் எரிந்து எழுப்பிய கூக்குரலை கேட்டுவிட்டுத் திரும்பியது அந்தக் கொலைகார கும்பல்.

டிசம்பர் 25 இயேசு பிரான் அவதரித்த நாளில், அன்னை வேளாங்கண்ணி மாதா கோவிலில் திருப்பள்ளி பாடி வழிபட்டனர். கீழ வெண்மணியில் அரைப்படி நெல் கூலி உயர்வு கேட்டதற்காக விவசாயத் தொழிலாளர்கள் குடி சையோடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர்.



கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் கீழ்வெண்மணிக்கு சென்று மக்களுக்கு ஆறுதல் சொன்னது மட்டும் அல்ல, கொடுஞ்செயல் புரிந்த குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கும் சட்டப் போராட்டத் திலும் இறங்கினர். நீண்ட போராட்டத்திற்கு பின்னர் நாகப்பட்டினம் நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது.

இதனை எதிர்த்து குற்றவாளிகள் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தனர். உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் "மிராசுதார்கள், சொந்தமாக "கார்" வைத் திருக்கிறார்கள். தும்பைப் பூ போல் வெள்ளை ஆடை அணிகிறார்கள். இப்படிப்பட்ட கண்ணியவான்கள் இதுபோன்ற கொடுங் குற்றத்தை செய்திருக்க மாட்டார்கள் எனக் கூறி அந்த மனித மிருகங்கள் விடுதலை செய்யப்பட்டன.

சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை கண்டித்து மாவட்டம் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டியது, கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பது வர லாற்றில் பதிந்து இருக்கும் உண்மையாகும்.

பன்மைப் பண்போடு, மனித உரிமைகள் மதிக் கப்படும் ஒரு சூழல் உருவாக வேண்டும். இதற்கு மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகள் ஜனநாயக புரட்சியை முன்னெடுக்க வேண்டும்.


இந்தத் திசைவழியில் உறுதியுடன் பயணிப் போம் என வெண்மணி தியாகிகள் பெயரில் உறுதி ஏற்போம். வெண்மணி தியாகிகள் திருப் பெயர் நீடூழி வாழ்க!

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

மக்களின் அடிப்படை பிரச்சனைகள் மட்டுமின்றி, இன்றைய ஒன்றிய அரசின் எதேச்சதிகாரம், அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகள், மதச்சார்பின்மைக்கு எதிரான நடவடிக்கைகள், மக்களை மத அடிப்படையில், சாதி அடிப்படையில் பிளவுப்படுத்தி தங்களின் குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக செயல்பட்டு வரும் ஆர். எஸ். எஸ். அமைப்பின் அரசியல் பிரிவான பா. ஜ. க.வை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள மற்ற எல்லோரைக் காட்டிலும் முனைப்புடன் களம் கண்டு வருகிறது.

அண்மையில் நடைபெற்ற மிசோரம், சட்டிஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், தெலுங்கானா ஆகிய ஐந்து மாநில தேர்தல் முடிவுகளில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஓர் பின்னடைவு போன்ற ஒரு மாயத் தோற்றம் ஏற்பட்டுள்ளது என்பது உண்மைதான். இத்தோற்றம் உருவாக முழுமையான பொறுப்பை காங்கிரஸ் கட்சி தான் ஏற்க வேண்டும்.

காங்கிரஸ் கட்சி நேரு காலத்தில் அல்லது இந்திரா காந்தி காலத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி தற்போது இல்லை என்பதனை உணர்ந்து, செயல்பட்டால் அவர்களுக்கு நல்லது.




ஒன்றியத்தில் உள்ள பாஜக ஆட்சி அகற்றப்பட வேண்டும் என்பது தான் அனைவருக்கும் உரிய நோக்கமாகும். நோக்கம் நிறைவேற வேண்டுமானால் அகில இந்திய அளவில் தலைமை தாங்குகிற கட்சியான காங்கிரஸ் கட்சி 'இந்தியா' கூட்டணியில் அங்கம் பெறும் அனைத்து தோழமைக் கட்சிகளையும் அரவணைத்து செல்வது அவர்களின் கடமையாகும்.

அத்தகைய கடமையை காங்கிரஸ் கட்சி மிகுந்த பொறுப்புடன் நிறைவேற்றி இருந்தால், பெரும் பின்னடைவை தவிர்த்து இருக்கலாம் என்பது மிக எதார்த்தமான உண்மையாகும்.

ஆனாலும் 5 மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி பெற்ற வாக்குகள் 4.92 கோடி, பாஜக பெற்றது 4. 81 கோடி ஆனால் வெற்றி பெற்ற இடங்கள் பாஜக 342. காங்கிரஸ் 235 . இவையெல்லாம் இன்றைய தேர்தல் முறையில் உள்ள பிரச்சினைகள். இவை ஒருபுறம் இருக்க, இவையே 2024 நடக்க உள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கு பொருந்தும் என்று எடுத்துக் கொள்ள தேவையில்லை.

மாறாக செய்ய வேண்டியது என்ன? என்பது குறித்து சிந்தித்து, பெற்ற படிப்பினைகளை கவனத்தில் கொண்டு முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் மதசார்பற்ற கூட்டணி அமைந்தது போன்று, மற்ற மாநிலங்களில் 'இந்தியா' கூட்டணி உருவாக வேண்டும். அதுவே வகுப்புவாதத்தை நாடு தழுவிய முறையில் தனிமைப்படுத்திடும். இந்தியா கூட்டணி வெற்றி பெறவும் வழிவகை செய்யும்.

99 ஆம் ஆண்டு தொடக்க நாளை மனதில் வைத்து மக்களை இடைவிடாமல் சந்திப்போம். மேலும் மக்களுக்கும், நமக்கான நல்லுறவை பலப்படுத்திடுவோம்.


கட்சிக் கிளைகள் உள்ள அனைத்து இடங்களிலும், முதற்கட்டமாக அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற அமைப்பை, இந்திய மாதர் தேசிய சம்மேளன அமைப்பை பலப்படுத்திடுவோம்.

வாக்குச்சாவடிதோறும் தேர்தல் பணிக் குழுவை அமைத்திடுவோம். இள வயதுக்காரர்களை வாக்காளர்களாக சேர்த்திட நடவடிக்கைகளை மேற்கொள்வோம். பணிகளை தொடர்வோம்.

மீண்டும் சந்திப்போம்!

வணக்கம்

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

## வினாடி - வினா

1. பசுமைக்குடில் விளைவு (கிரீன் ஹவுஸ் எபெக்ட்) என்றால் என்ன?

2. பசுமைக்குடில் வாயுக்களை அதிக அளவில் வெளியேற்றும் காரணிகள் எவை?

3. தொழில் புரட்சிக்கு முன், 10 ஆயிரம் ஆண்டுகளில் கார்பன் டை ஆக்சைடு எவ்வளவு அதிகரித்தது?

4. தொழில் புரட்சிக்குப் பிறகு கார்பன் டை ஆக்சைடு எத்தனை விழுக்காடு அதிகரித்துள்ளது?

5. கார்பன் டை ஆக்சைடு வாயுவை அதிக அளவில் வெளியேற்றும் நாடு எது?

6. இன்றைய காலநிலை மாற்றத்திற்கு மனிதர்களே முதன்மைக் காரணம் என்பது சரியா? தவறா?

விடைகள் 5 ஆம் பக்கம்



# இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பிதாமகன் தோழர் சிங்காரவேலர் 110 ஆண்டுகளுக்கு முன்னால்..



அ.மு.சலீம்

**சிங்காரவேலர், ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட மக்களின் விடுதலை உரிமைப் போராட்டத்தை தட்டியெழுப்ப மார்க்சிய ஒளியால் தானாகவே ஈர்க்கப்படுகிறார்.**

ரஷ்யாவில் ஜார் மன்னனின் கொடுங்கோலாட்சிக்கு எதிராக நடந்த மக்கள் போராட்டங்களும், சமூக கொந்தளிப்புகளும், தீவிரமான அரசியல் மாற்றத்திற்கு இட்டுச் சென்றது. மாமேதை லெனின் அவர்கள் மார்க்சிய சிந்தனைகளை உள்வாங்கி... பாட்டாளிகள், வெகுமக்களை அணிதிரட்டி சோஷலிஸ்டு புரட்சிக்கான திட்டத்துடன் தீவிரமாக செயலாற்றி வந்தார்.

1917 ஆண்டு நவம்பர் 7ஆம் நாள் ரஷ்யாவில் புரட்சி நடந்தது. ஜார் மன்னன் தூக்கி எறியப்பட்டான். மானுட உலகின் வரலாற்றில் முதன்முதலாக தொழிலாளர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தது. சோவியத் யூனியன் உருவானது.

சோவியத் புரட்சி உலகமுழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்திய மண்ணில் குறிப்பாக தோழர் சிங்காரவேலரின் சிந்தனைகளை தீவிரப்படுத்தியது.

**முன்னோடி...**

இந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் தோழர் சிங்காரவேலர் தொழிற்சங்க நடவடிக்கைகளை துவக்குகிறார்.

இந்தியாவில், சென்னை, பம்பாய், கல்கத்தா, லாகூர் ஆகிய பெருநகரங்களில் கம்யூனிஸ்டு குழுக்கள் உருவாகின்றன. சென்னையில் தோழர் சிங்காரவேலுவும், பம்பாயில் எஸ்.ஏ.டாங்கேவும் கல்கத்தாவில் முஸாபர் அகமது, லாகூரில் குலாம்உசேன் ஆகியோர் செயல்படுகிறார்கள்.

1922ல் மாமேதை லெனின் தலைமையில் இயங்கி வந்த கம்யூனிஸ்டு அகிலம் காலனி நாடுகளின் மீது கவனத்தை திருப்புகிறது. ஏகாதிபத்திய எதிர்ப்பு முழக்கத்தை லெனின் முன்மொழிகிறார். இந்திய நாட்டிற்கு வெளியே... அயல் நாடுகளிலிருந்து கொண்டு கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் குழுவிலிருந்த தோழர்.எம்.என். ராய் அவர்கள் லெனின் அவர்களின் வழிகாட்டுதல்படி, இந்தியாவில் புரட்சிகர வெகுமக்கள் கட்சி நிறுவுவதற்கு பரிசீலிக்க வேண்டும் என்று தோழர்சிங்காரவேலரிடமும், தோழர் எஸ்.ஏ.டாங்கேவிடமும் வேண்டுகிறார். அது நிறைவேறாமல் போகிறது.

**கயா மாநாட்டு உரை**

1922 இறுதியில் கயாவில் காங்கிரஸ் மாநாடு நடக்கிறது. அங்கே சிங்காரவேலுவும் ; எஸ்.ஏ.டாங்கேவும் சந்திக்கிறார்கள். சிங்காரவேலு வரலாற்று சிறப்புமிக்க உரையாற்றுகிறார்.

“உலககம்யூனிஸ்டுகளின் (கம்யூனிஸ்டு அகிலம்) பிரதிநிதியாக நான் வந்துள்ளேன். கம்யூனிஸ்டு அகிலத்தின் வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன். அதேபோல இந்த கயா காங்கிரஸ் மாநாடு சிறக்க உலக கம்யூனிஸ்டுகள் (கம்யூனிஸ்டு அகிலம்) முழுமையாக நம்பிக்கை கொண்டு ஆதரவளிக்கிறார்கள் என்றார்”

மேலும்.. இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள்; காங்கிரஸ் அமைப்பின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கிறார்.

அதனால் காங்கிரஸ் இயக்கம் சார்பில் தொழிற்சங்க காங்கிரஸிற்கு உதவுவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு அதில் தோழர். சிங்காரவேலர் நியமிக்கப்படுகிறார்.

மேதினம்

1923ஆம் ஆண்டு மே – 1ல் சென்னை கடற்கரையில் சிங்காரவேலு தலைமையில் மே தினம் கொண்டாடப்படுகிறது. மே தின எழுச்சியுரையாற்றுகிறார். இது இந்தியாவின் முதல் மே தின விழா மட்டுமல்ல ஆசியா கண்டத்திலேயே முதன் முதலாக நடந்த மே தின விழா என்றும் கூறலாம்.

கம்யூனிஸ்டு கட்சி துவக்கும் முயற்சிகள்

இந்தியாவின் பல்வேறு மையங்களில் செயல்பட்ட இளம் கம்யூனிஸ்டு குழுக்களைச் சார்ந்தோரும், கம்யூனிஸ்டு அகிலத்தில் பணியாற்றிய எம்.என். ராய் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை பகிரங்கமாக செயலாற்ற பிரிட்டிஷ் அரசு அனுமதிக்காது என்று உணர்ந்து, கம்யூனிஸ்டு கட்சியை சட்டரீதியாக செயல்பட பல்வேறு கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

ராய் மக்கள்கட்சி என்ற பெயரில் கட்சியை உருவாக்க சொல்கிறார். டாங்கே தொழிலாளர் சோஷலிஸ்டு கட்சி என்று கருத்தை முன்வைத்தார். ஆனால்..



1923ல் தமிழ்நாட்டில்சிங்காரவேலு அவர்கள், இந்துஸ்தான் தொழிலாளர் விவசாயிகள் கட்சி (HINDUSTHAN LABOUR KISAN PARTY) என்ற வெளிப்படையான கட்சியை நிறுவி அதற்கென ஒரு கொள்கை அறிக்கையும், லேபர் கிசான் கெஜட் என்ற பத்திரிக்கையும் தொடக்கினார்.

தொழிலாளர் விவசாயிகள் கட்சி நிறுவதற்கு கம்யூனிஸ்டு அகிலத்தின் ஆதரவு இருந்தது என்பது குறிப்பிடத்தகுந்தது. இதற்கான கம்யூனிஸ்டு அகிலத்தின் வாழ்த்துச் செய்தியும், ராய் யின் செய்தியும் போலீஸ் கையில் கிடைத்துவிட்டன.

1923 பிப்ரவரியில் ராய் அவர்கள் இந்தியாவில் செயல்படும் கம்யூனிஸ்டு குழுக்களின் தலைவர்களை ஜெர்மன் நாட்டில் பெர்லின் மாநகருக்கு வரவேண்டும் அங்கு கம்யூனிஸ்டு அகிலத்தின் தலைவர்களுடன் கலந்துரையாடி இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் அமைப்பை பெர்லினில் துவக்கலாம் என்று தெரிவித்தார். ஆனால் அது நடைபெறவில்லை.

இந்தியாவிற்கு வெளியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்படுவதை சிங்காரவேலரும், எஸ்.ஏ.டாங்கேவும் நிராகரித்து விட்டார்கள்.

காந்தியடிகள் தலைமையில் நடைபெற்ற விடுதலை இயக்கத்தின்பால் மாமேதை லெனின் மிகவும் மதிப்பு கொண்டிருந்தார். மக்கள் மனதை கவர்ந்தவராகவும், மக்கள் இயக்கத்தை கவர்ந்தவராகவும், ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு கொண்டவராகவும் காந்தியடிகள் விளங்குவதால் அவரை ஓர் புரட்சியாளராகவே லெனின் கருதினார்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் 2வது மாநாட்டில் தேசிய இனப் பிரச்சனைகள் மற்றும் காலனியாதிக்கப் பிரச்சனைகள் சம்பந்தமாக லெனினால் தயாரிக்கப்பட்ட அடிப்படை கருத்துக்கள் மிக முக்கியமானவை.

எம்.என்.ராய் தேசிய விடுதலை இயக்கங்களின்பால் ஒரு எதிர்மறை போக்கையே கொண்டிருந்தார். எம்.என். ராய் கருத்துக்கள் பலவற்றை லெனின் நிராகரித்தார்.

இந்தியாவில் இயங்கிய கம்யூனிஸ்டு குழுக்கள் ஒன்றுகூடி, அக்டோபர் புரட்சியின் சிறப்புமிக்க குழந்தையாக 1925 டிசம்பர் 25ம் நாள் கான்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்கிற பேரியக்கத்தை துவக்கினார்கள். முதல்மாநாட்டை நடத்தினார்கள்.

இந்திய விடுதலைப்போராட்டத்துக்கான திட்டங்கள், வழிமுறைகளுக்கான ஆய்வுமையமாக இந்த மாநாடு விளங்கியது. மிகச்சிறந்த தேசபக்தர்கள் பலரின் வெவ்வேறு உள்ளங்களையும் பார்வையையும் கம்யூனிஸத்தின்பால் சிந்திக்கும் நிலையை இம்மாநாடு ஏற்படுத்தியது.

1925 கான்பூரில் கூடிய இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முதல் துவக்க மாநாட்டிற்கு தோழர் சிங்காரவேலு தலைமை தாங்கி தலைமை உரையாற்றுகிறார்.

**தலைமை உரை**

இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகளாகிய நாம் இந்த அரங்கில் இந்தியாவில் நிலவும் அரசியல், பொருளாதார நிலமையைப் பொதுவாக ஆராயவும், நம் நாட்டு மக்கள் வாழ்வை மேலும் சிறப்பாக்கவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் ஆக்குவதற்குரிய நடவடிக்கைகளைத் திட்டமிடவும் இன்று கூடியுள்ளோம்.

**இந்திய நிலமை...**

நம்நாட்டில் நூற்றுக்கு 80 விழுக்காட்டின் எழுத்தறிவற்றவர்கள். நான்கில் ஒரு பகுதியினர் தீண்டத்தகாதோர் எனப்படுவர். தங்கள் ஆண்டவர்களுக்குத் தொண்டூழியம் செய்வதைத் தவிர நாட்டு மக்களின் பிற பிரிவினரிடம் வேறெந்த சமூக உறவுமில்லாதவர்கள்; பொது ஆலயங்களில் நுழைவதற்கு இவர்களுக்கு உரிமை கிடையாது. பொதுக்குளங்களில் அவர்கள் குளிக்க முடியாது. பொதுச்சாலைகளை பயன்படுத்த முடியாது. இந்நிலைமையில் இந்தியா இருக்கிறது.

தீண்டாமை பிரச்சனை என்பது முற்றிலும் பொருளாதாரப் பிரச்சனை. அவர்களின் பொருளாதார சார்பு நிலை நீக்கப்பட்டால்தான்; தீண்டாமை எனும் சமூகக்கறை மறையும்.

நிலஉடமையில்உள்ளஇந்தபொருளாதார ஏற்றத்தாழ்வே கோடிக்கணக்கான அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமைத்தனத்திற்கான தலையாய காரணமாகும்.

எந்த பணக்காரனும் தம் பொருள்களை ஏழைக்கு தானமாகவோ அல்லது அவர் சார்ந்த மதத்தின் தர்ம சிந்தனைகளின் விளைவாகவோ ஒரு போதும் பங்கீட்டுத் தரமாட்டான்.

உற்பத்தி சாதனங்கள் சில மனிதர்களின் ஏகபோக உரிமையாக இருப்பதால் உண்மையாகவே உற்பத்தி செய்வோர் பட்டினி கிடந்து துன்புறுகின்ற நிலைக்கு ஆளாகிஉள்ளனர். ஆகையால் உழைப்பாளிகளுக்கிடையில் உற்பத்தி செய்யப்பட்ட எல்லா பொருட்களிலும் ஒவ்வொருவருக்கும் முறையான பங்கு கிடைக்க வேண்டுமென்றால்.. உற்பத்திச் சாதனங்கள் உற்பத்தி செய்வோருக்காகே உடமையாக இருக்க வேண்டும்.

கம்யூனிஸம் என்பதன் பொருள் இதுதான். இந்த கம்யூனிஸ்ட் கருத்துக்களை விளம்பரம் செய்ய நாம் முயற்சி மேற்கொண்டுள்ளோம்.

சாதி, சமய வேறுபாடுகளை ஒழிப்பது. நமது நேரடியான நோக்கமாகும். சாதி சமய உணர்வுகளின் ஆழ்மனக்கிலிகளிலிருந்து விடுபட வேண்டும். (சாதிய, சமய உணர்வுகள் என்பது ஒரு மன ஓட்டம்)

எளியோரை வலியோர் சுரண்டலிலிருந்து மீட்டெடுத்து, கலை, கலாச்சாரம், கல்வி, விஞ்ஞானம் ஆகியவைகளை எல்லோரும் அனுபவிக்க, தொழிலாளர்கள், புரட்சி கீதத்தை இசைக்க வேண்டும். தேவைப்பட்டால் நாட்டிலுள்ள மற்ற அரசியலமைப்புகளுடனும் ஒத்துழைத்து இந்த லட்சியத்தை அடைய வேண்டும்.

**நிர்வாகிகள் தேர்வு...**

மூன்று நாட்கள் கடந்த இந்த முதல் மாநாட்டில் இறுதியில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் முதல் தலைவராக சிங்காரவேலர் தேர்ந்தெடுக்கப்பட்டார். எஸ்.வி.காட்டே செயலாளர்களில் ஒருவராகவும், தோழர்கள் கே.என்.ஜோக்லேகர், ஆர்.எஸ்.நிம்பர், முஸாபர் அகமது மற்றும் சிலர் முதல் மத்தியகுழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**இந்திய கம்யூனிஸ்டு கட்சி துவக்க நாள் முடிவு**

1959ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்தோனேசிய கம்யூனிஸ்டு கட்சி அனுப்பிய கடிதத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி எப்போது தோன்றியது எனக் கேட்டிருந்தது.

1959ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19ஆம் தேதி நடந்த மத்திய செயற்குழு கூட்டத்தில் தோழர்கள் அஜய்கோஷ், பி.டி.ரணதிவே, பி.சி.ஜோஷி, எம்.பசவபுன்னயயா, இஜட் ஏ.அகமது, எஸ்.ஏ.டாங்கே, ஏ.கே.கோபாலன் ஆகியோர் பங்கேற்று கட்சியின் அமைப்பு தினம் பற்றி ஆலோசித்தனர். 1925ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் தேதியைக் கட்சியின் அமைப்பு தினமாக செயற்குழு முடிவு செய்தது.

இந்த முடிவை செயற்குழுவின் சார்பில் பி.டி.ரணதிவே அவர்கள் கையெழுத்திட்டு இந்தோனேசியக் கம்யூனிஸ்டு கட்சிக்கு பதில் கடிதம் அனுப்பினார்.

இவ்வாறாக... இந்திய திருநாட்டில் பிறந்து, இந்திய மண்ணில் செயலாற்றிய இந்திய கம்யூனிஸ்டு இயக்கத்தின் மூதாதையர்களில், மூலகர்த்தாக்களில், முதன்மையாளராக நின்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் வழிகாட்டியாக தோழர் சிங்கார வேலர் திகழ்ந்தார்.

தொடர்புக்கு: 9443389291

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வீர தீர தியாக வரலாறு



எம்.ரவி

**1925 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி இந்தியாவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்டது. இன்று 99 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. நூற்றாண்டை நோக்கி பீடு நடைபோடுகிறது.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு மெய்சிலிர்க்க வைக்கும் மாபெரும் வரலாறு. தியாகம் ததும்பும் வரலாறு. வீரம் பொங்கும் வரலாறு. இந்திய நாட்டின் போராட்டங்களின் வரலாறு. ஈடு இணையற்ற கட்சியின் வரலாறு.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடந்த விடுதலை இயக்கத்தின் திட்டத்திற்கு "பரிபூரண விடுதலை" என முதன் முதலில் வழிகாட்டிய பெருமைமிக்க கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

"கண்ணீருக்கு பதிலாக புரட்சியையும்", "கற்பனைக்கு பதிலாக விஞ்ஞானத்தையும்" வழங்கிய "மார்க்சீயத் தத்துவத்தை" அறிவாயுதமாக கொண்டு செயல்படும் மகத்தான மக்கள் இயக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

இந்திய விடுதலைப் போரில் எண்ணற்ற தோழர்கள் தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

விடுதலைக்குப் பின்னரும் இந்திய உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக, விவசாயிகளின் நலனுக்காக, அளப்பரிய தியாகம் செய்தவர்கள் அங்கும் வகித்த கட்சி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.



இந்தியாவில் ஜனநாயகம், மனித உரிமைகள், மக்கள் நலன் ஆகியவற்றிற்காக தொடர்ந்து குரல் கொடுத்து போராடிவரும் இயக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

இந்தியாவில் உள்ள மாணவர்கள், இளைஞர்கள், மாதர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், வங்கி ஊழியர்கள் என ஒவ்வொரு அமைப்பையும் வர்க்க வெகுமக்கள் அமைப்புகளாக திரள்வதற்கான முதல் அமைப்புகளை உருவாக்கிய பெருமைக்குரியது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

சாதியத்தை ஒழிப்பதற்கும், வர்க்க பேதங்கள் ஒழிவதற்கும், சமூக நீதியை நிலைநாட்டுவதற்கும் ஒடுக்கப்பட்ட மக்களை திரட்டி போராடவைத்த இயக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

### நிலமீட்சிப் போராட்டங்கள்!

1946 ஆம் ஆண்டு 4000 கிராமங்களை விடுவித்து 10 லட்சம் ஏக்கர் நிலங்களை கைப்பற்றி பல ஆயிரக்கணக்கான விவசா யிகளுக்கு வழங்கியதுடன் நிஜாமின் நிலப்பரப்புத்துவ ஆட்சிக்கு எதிரான தெலுங்கானா ஆயுதப் போராட்டம்

திருவாங்கூர் சமஸ்தான ஆட்சிக்கு எதிரான புன்னப்புரா, வயலார் ஆயுதப்புரட்சி,

நிலப்பரப்புத்துவ எதேச்சதிகாரத்திற்கு எதிராக, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒரிசாவிலும், காஷ்மீரத்திலும் நடந்த எழுச்சிப் போராட்டம் தொடங்கி...

பூண்டி வாண்டையார், உக்கடைத் தேவர், குன்னியூர் சாம்பசிவ ஐயர், வலிவம் மனைத்துணைநாத தேசிகர், வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார், திருப்பனந்தாள் ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், சங்கராச்சாரியார் மடம், ருத்ராபதி மடம் ஆகியவற்றுக்கு எதிராகவும்

"சாணி பாலை நிறுத்து", "சாட்டையால் அடித்தால் திருப்பி அடி" என்று வீரமுழக்கமிட்டு கூனிக்குறுகி அடிமையாக இருந்த அடித்தட்டு மக்களை தலை நிமிரச்செய்த வீர வரலாறு கொண்டது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

இன்னும் அது தொடர்கிறது திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் உபரி நிலங்களை ஏமாற்றி வைத்திருந்த நிலச்சுவான்தார்களிடமிருந்து மீட்டு உரிய பயனாளிகளுக்கு பெற்றுத் தந்துள்ளது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, வகுப்புவாத எதிர்ப்பு, மதவெறி, சாதிவெறி சக்திகளுக்கு எதிர்ப்பு என சமரசமின்றி களமாடும் இயக்கம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

### 1922 ல் பெஷாவர் வழக்கு

ஏகாதிபத்தியத்தை எதிர்த்ததால் இந்தியாவில் ஆட்சி செய்யும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை கவிழ்க்க சதிசெய்தார்கள் என்ற முதல் சதி வழக்கு 13 கம்யூனிஸ்ட் புரட்சியாளர்களுக்கு கடுங்காவல் தண்டனை.

### 1923 - 24 ல் கான்பூர் சதி வழக்கு

இந்தியாவின் மீதான பிரிட்டிஷ் மாமன்னரின் சுயாதிபத்திய உரிமையை பறிப்பதற்கு சதி செய்தார்கள் என்று கம்யூனிஸ்டுகள் மீது வழக்கு தண்டனை.

### 1929 மார்ச் 20 - மீரட் சதி வழக்கு

பிரிட்டிஷ் சக்ரவர்த்தியிடமிருந்து இந்தியாவின் இறையாண்மையை பறிப்பதற்கான சதிசெயலில் ஈடுபட்டதாக 31 கம்யூனிஸ்ட் தலைவர்கள் மீது வழக்கு.

நாட்டை விட்டே வெளியேற்றும் தண்டனை உட்பட பலவிதமான சிறை தண்டனைகள் வழங்கப்பட்டன.

இதேபோல் நாடு முழுவதும் பல சதி வழக்குகள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் மீது சுமத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டன. இந்திய விடுதலைக்குப் பின்னரும் பல சதி வழக்குகள் போடப்பட்டன.

தற்போது இந்துத்துவ மத வெறி ஆட்சி நடந்து கொண்டுள்ளது. இந்த ஆட்சியின் மதவெறி கருத்துக்கு எதிராக, "சத்ரபதி சிவாஜி காவிநாயகன் அல்ல காவிய

---

## 1 ஆம் பக்கத் தொடர்ச்சி

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

உத்தரப்பிரதேசம் மாநிலம் லக்னோவைச் சேர்ந்த சாகர் சர்மா என்ற இளைஞரும், கர்நாடக மாநிலம் மைசூரை சேர்ந்த மனோரஞ்சன் என்ற இளைஞரும் அனைத்து சோதனைகளையும் கடந்து நாடாளுமன்றத்தில் பார்வையாளர் பகுதியான மேல் தளத்தில் உள்ள மாடத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினருக்கு முன்னால் உள்ள மேஜையின் மீது குதித்து இருக்கிறார்கள்.

இது எவ்வாறு சாத்தியமாயிற்று? மேல்மாடத்தில் அமர்ந்து மட்டுமே இருக்கலாம்; நடமாடவோ, அங்குமிங்கும் அசையவோ கூட முடியாது. பிறரிடம் பேசவும் முடியாது. எழுந்து நிற்கவும் கூடாது.

இதில் எதைச் செய்தாலும் அங்குள்ள பாதுகாப்பு அதிகாரிகள் அத்தகைய செயல்களை தடுத்து விடுவார்கள். செய்தவர்களை வெளியேற்றி விடுவார்கள். இவ்வளவு பாதுகாப்புகள் நிறைந்திருந்தும் அந்த இரு இளைஞர்களும் மாடத்தில் இருந்து குதித்து தங்கள் காலணிகளில் மறைத்து வைத்திருந்த வண்ணப் புகையை உமிழும் குப்பியின் மூலம் புகை மண்டலத்தை உருவாக்கி இருக்கிறார்கள்.

இந்த சம்பவம் நடந்த போது, அவை தலைவர் ஓம் பிர்லாவோ, பிரதமர் மோடியோ, வலிமை மிக்க அமைச்சர் அமீத்ஷாவோ நாடாளுமன்ற கட்டிடத்தில் இல்லை. நடைபெற்ற சம்பவம் ஒன்றிய அமைச்சர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மட்டுமல்ல நாட்டையே பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

இந்த சம்பவத்தை யாரும் நியாயப்படுத்தவில்லை. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்கிற எந்தவித வேறுபாடுகளும் இல்லாமல் ஒருமித்த குரலில் தங்களின் கண்டனங்களை வெளிப்படுத்தி உள்ளது வரவேற்கத்தக்கது.

நடைபெற்ற சம்பவம் குறித்து அடுத்த நாள் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகுந்த பொறுப்புணர்வுடன் பிரச்சனையை சபையில் எழுப்பி, இத்தகைய அபாயகரமான பாதுகாப்பற்ற நிலை குறித்து நாட்டின் பிரதமர் மோடியின் உள்துறை அமைச்சர் ஆன அமித் ஷாவும் அவைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்க வேண்டும் என்று கோரினார்கள்.

இந்தக் கோரிக்கையை வைப்பதென்ன அவ்வளவு பெரிய குற்றமா?!

நாடாளுமன்ற கட்டிடத்திற்கு ஊடுருவிப் புகுந்ததை காட்டிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விளக்கம் கேட்டது பெரிய குற்றமாகிவிடுமா?

அதே 13ஆம் தேதி காலையில், பழைய நாடாளுமன்றப் பகுதிக்கு பிரதமர் மோடி சென்று, 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவத்தில் உயிர் தியாகம் செய்து உயிர் விட்ட ஒன்பது வீரர்களுக்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்தினார். "நாடாளுமன்ற கட்டிடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பது நாட்டில் ஜனநாயகத்தின் மீதும் இந்தியாவின் ஆன்மீகத்தின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் ஆகும்" என பிரதமர் மிகப் பிரமாதமாக பேசினார்.

சம்பவத்தை கேள்விப்பட்டவுடன் தனது நிகழ்ச்சிகள் அனைத்தையும் ரத்து செய்துவிட்டு பிரதமர் நாடாளுமன்றத்திற்கு விரைந்து வந்திருக்க வேண்டாமா? வரவில்லை!

மாறாக வேறு பல நிகழ்ச்சிகளுக்கு சென்று விட்டார். இவ்வாறு சபைக்கு வராமல் புறக்கணிப்பது பொறுப்பற்ற செயல் அல்லவா? தனது பொறுப்பை உணர்ந்து செயல்பட்டிருக்க வேண்டாமா?

இன்னும் கூடுதலாக, இந்த இரண்டு இளைஞர்களுக்கும் அனுமதிச் சீட்டு வழங்கியவர், கர்நாடகா மாநிலத்தின் மைசூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பிரதாப் சிம்ஹா. இவர் பாஜகவைச் சேர்ந்தவர். நாடாளுமன்ற அவையில் எந்த சலனமும் இல்லாமல் அமர்ந்திருந்தார்.

ஆனால் எதிர்கட்சிகளைச் சேர்ந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கே. சுப்பராயன், திமுகவைச் சேர்ந்த கனிமொழி, மார்க்சிஸ்ட் கட்சியின் பி ஆர் நடராஜன், சு வெங்கடேசன், காங்கிரஸ் கட்சியின் ஜோதிமணி, மாணிக்தாகூர் உட்பட 13 மக்களவை உறுப்பினர்களும் ஒரு மாநிலங்களவை உறுப்பினரும் குளிர்கால கூட்டத்தொடர் முழுமைக்கும் இடைநீக்கம் (சஸ்பெண்ட்) செய்யப்பட்டுள்ளனர். 19 ம் தேதி வரை 142 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சபைக்கு வராத சேலம் தொகுதி திமுக உறுப்பினரும் இடைநீக்கம் செய்யப்பட்டு பின்னர் தவறு நடந்து விட்டது என கூறி, அது ரத்து செய்யப்பட்டுள்ள அவலமும் அரங்கேறி உள்ளது.

இந்த அத்துமீறிய சம்பவத்தில் ஈடுபட்ட இரு இளைஞர்களும் இஸ்லாமிய மதத்தை சார்ந்தவர்களாக மட்டும் இருந்திருந்தால் அரசின் அணுகுமுறை எவ்வாறெல்லாம் இருந்திருக்கும்?

இரு இளைஞர்களுக்கும் பாஸ் வழங்கியவர் பாஜக இல்லாமல், இந்தியா கூட்டணி கட்சியைச் சார்ந்த உறுப்பினராக இருந்திருந்தால் அரசின் அணுகுமுறை எவ்வாறெல்லாம் இருந்திருக்கும்?

இந்தியா கூட்டணியைச் சார்ந்தவர்கள் நாட்டிற்கு எதிராக ஜனநாயகத்திற்கு புறம்பாக சதித்திட்டம் தீட்டி உள்ளார்கள் என்று குற்றம் சுமத்தி நாட்டையே கலவர சூழலுக்கு இரையாக்கி இருப்பார்களா இல்லையா?

ஆனால் தற்போது அமைதி காக்கிறார்கள். பரிந்துரை தந்தவர் மீது குறைந்தபட்ச கண்டனம் கூட தெரிவிக்க அரசு தயாராக இல்லை. காரணம் அவர் பாஜக உறுப்பினர் என்பதை தவிர வேறு என்ன?

பாஜக உறுப்பினர் தவிர, வேறு கட்சியைச் சார்ந்தவராக அவர் இருந்திருந்தால் நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கி இருப்பார்கள் அல்லவா?

இதுவே பிரதமர் மோடியின் ஜனநாயகம் ஆகும்!

இத்தகைய தீங்குடையோருக்கு பாடம் கற்பிக்க வருவதுதான் 2024 நாடாளுமன்றத் தேர்தல். அதற்கான பணிகளை துல்லியமாக நிறைவேற்ற ஆயத்தமாவோம்.

**இரா.முத்தரசன், மாநில பொதுச்செயலாளர்**

---

## வினாடி - வினா விடைகள்

1. வளிமண்டலத்தில் உள்ள சில வாயுக்கள் புவியை கதகதப்பாகவும் வெப்பமாகவும் வைத்திருப்பது.
2. ஊர்திப் போக்குவரத்தும் மின் உற்பத்தியும் மிகப்பெரும் காரணிகள்
3. 1விழுக்காடுக்கும் குறைவாகவே உயர்ந்தது.
4. வளிமண்டலத்தில் 49 விழுக்காடு கார்பன் டை ஆக்சைடு அதிகரித்துள்ளது.
5. அமெரிக்கா
6. சரியே

# மாணவர், இளைஞர்களின் நம்பிக்கை ஒளி...



க.பாரதி

**1917 அக்டோபர் புரட்சியின் விளைவாய் புதிய பாதைகளை தேடிய இந்திய புரட்சியாளர்களின் முயற்சியின் பயனாகவே விடுதலைப் போரின் போது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925 ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் தேதி கான்பூரில் நடைபெற்ற மாநாட்டில் தொடங்கப்பட்டது.**




ஏற்கனவே மகாத்மா காந்தியின் தலைமையில் நடைபெற்று வந்த ஒத்துழையாமைஇயக்கம் கைவிடப்பட்டதன் காரணமாக விரக்தியில் இருந்த எண்ணற்ற இளைஞர்களுக்குஅக்டோபர் புரட்சியின் தாக்கமும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கவும் பெரும் உற்சாகம் அளித்தன.

இந்நிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்ததால் தலைமறைவாக இயங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதனால் பொதுவுடைமை கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட இளைஞர்களும் மாணவர்களும் தனித்தனியே பல்வேறு புரட்சிகர குழுக்களை தொடங்கினர்.

அவ்வாறு தொடங்கப்பட்ட குழுக்களில் ஒன்று தான் மாவீரன் பகத்சிங் அவர்களால் உருவாக்கப்பட்ட நவஜவான் பாரத சபா என்ற அமைப்பு.

பின்னர் இந்த அமைப்பு தேச முழுமைக்கும் செயல் பட்டு வந்த பல்வேறு புரட்சிகர குழுக்களை இணைத்து இந்தியா சோசலிஸ்ட் குடியரசு ராணுவம் எனும் அமைப்பாக உருவானது.

இதே காலகட்டத்தில் 1928 ல் கல்கத்தாவில் அகில இந்திய சோசலிச இளைஞர் மாநாடு நடைபெற்றது. ஜவகர்லால் நேரு அதற்கு தலைமை வகித்தார்.

இதற்குப் பின்னர் பஞ்சாப், டெல்லி,உ.பி, சென்னை,லாகூர், போன்ற நகரங்களில் இயங்கி வந்த மாணவர் குழுக்களை ஒருங்கிணைத்து இந்தியாவின் முதல் மாணவர் அமைப்பாக 1936 ஆம் ஆண்டு அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் லக்னோவில் தொடங்கப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த இந்த காலத்தில் பொதுவுடைமை கருத்துக்களால் ஈர்க்கப்பட்டுஇருந்த மாணவர்கள் நேரடியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் செயல்பட முடியாத நிலையில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர்.

இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் தொடக்க கால தலைவர்களாக இருந்த தோழர்கள் பி.சி ஜோசி அஜய்குமார் கோஷ் மாணவர் பெருமன்றத்தை உருவாக்குவதில் மிக முக்கிய பங்காற்றியவர்கள் ஆவர்.

பின்னாளில் தோழர் ஏ. பி.பரதன் அவர்கள் மாணவர் பெரு மன்றத்தின் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு செயல்பட்டார்.

1946 இல் நடைபெற்ற கப்பற்படை எழுச்சிப் போராட்டத்தில் மாணவர் பெருமன்றம் எழுச்சியோடு பங்கு பெற்றது.

1947 ல் இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தது.

இந்தியா விடுதலை பெற்றவுடன் ஆளும் காங்கிரஸ் மாணவர்களுக்கு சொன்ன புத்திமதி "அரசியயிலிருந்து விலகி யிருங்கள்" என்பதாகும்.

பிரிட்டிஷ் காலணி ஆதிக்கத்தை எதிர்த்த மாணவர்களின் போராட்டம் மிகுந்த போற்றுதலுக்குரியது. ஆனால் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தவுடன் மாணவர்களை புறந்தள்ளியது.

இந்நிலையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இளைஞர் மாணவர் அமைப்புகளை உருவாக்கியதோடு சரியாக வழிகாட்டியது.

இக்காலகட்டங்களில் எழுப்பப்பட்ட முழக்கங்கள்தான் "அனைவருக்கும் கல்வி" அனைவருக்கும் வேலை என்பதாகும்.

பின்னர் இளைஞர்களுக்கு என்று தனித்த அமைப்பாக அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் 1959 ஆம் ஆண்டு மே 3 ஆம் நாள் தொடக்கப்பட்டது.

நாடு முழுமைக்கும் உள்ள இளைஞர் குழுக்களை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட முதல் அகில இந்திய இளைஞர் அமைப்பு இதுதான்.

இளைஞர் பெருமன்றம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முழங்கி வந்த "வயது வந்தோருக்கான வாக்குரிமை" எனும் முழக்கத்தை இந்திய இளைஞர்களின் முழக்கமாக மாற்றியது. இதனால் வயது வந்தோருக்கான வாக்குரிமை உத்திரவாதப்படுத்தப்பட்டது.

பின்னாட்களில் கேரள மாநில முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்ட பி.கே. வாசுதேவன் நாயர்தான் அனைத்திந்திய இளைஞர் பெரு மன்றத்தின் முதல் பொதுச் செயலாளர் ஆவார்.

1960 களில் மாணவர் பெருமன்றம் இளைஞர் பெருமன்றமும் பரவலாக வலுப்பெற ஆரம்பித்தன .

1962ல் செப்டம்பரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறைக்ககூவலை ஏற்று லட்சக்கணக்கான மக்கள் டெல்லி பேரணியில் கலந்து கொண்டனர்.

வரலாற்றில் எந்த ஒரு கட்சியும் இதற்கு முன்பாக டெல்லியில் இப்படி ஒரு பேரணியை நடத்தியதில்லை.இதில் இளைஞர் மாணவர் பெருமன்றம் முழு வீச்சில் கலந்து கொண்டது.

அதேபோல் 1964 இல் உணவு நெருக்கடிக்கு தீர்வு கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்தப்பட்ட இயக்கங்கள் இளைஞர் மாணவர் அமைப்புகள் வளர பெரிதும் உதவின.

இந்த காலக்கட்டத்தில் ஜன சங்கம் போன்ற வகுப்புவாத கட்சிகள், ஆர் எஸ். எஸ் போன்றவை சீன ஆக்கிரமிப்பு குறித்து இந்திய கம்யூனிஸ்டுகள் மீது அவதூறுகளை அள்ளி வீசினர்.

இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை சீன ஆக்கிரமிப்பை கண்டித்து தங்கள் நிலையை தெளிவுபடுத்தியதால் தேசபக்த எண்ணம் கொண்ட இளைஞர்களும் மாணவர்களும் பெருமளவில் இளைஞர் மாணவர் அமைப்புகளில் குவியத் தொடங்கினர்.

1964ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி யிலிருந்து வெளியேறிய தலைவர்கள் பின்னாட்களில் இளைஞர் மாணவர் அமைப்புகளையும் பிளவுபடுத்தினர்.

1960 களில் வெகு வேகமாக வளர்ந்து வந்த மாணவர் இளைஞர் இயக்க வளர்ச்சியில் பெரும் தேக்க நிலை உருவானது.

பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாணவர் இளைஞர் மத்தியில் தீவிரமாக பணியாற்ற தொடங்கியது.

70களிலும்80களிலும்இந்த அமைப்புகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தில் ஏறத்தாழ அனைத்து மாநிலங்களிலும் சாதித்தன.

மாணவர், இளைஞர் கோரிக்கையிலும் அரசியல் பிரச்சனைகள் மீதும் வகுப்புவாத, சக்திகளை எதிர்த்தும்,இந்திய தேசிய ஒருமைப்பாடு, மாநில உரிமைகளை பாதுகாக்கவும் ,ஆரம்பக் கல்வி முதல் ஆராய்ச்சி கல்வி வரை இலவச கல்வி கேட்டும் படிப்புக்கேற்ற வேலை கேட்டும், வேலையின்மையை எதிர்த்தும் மாணவர் பெருமன்றமும் இளைஞர் பெருமன்றமும் தொடர்ந்து போராடிவருகிறது.

1991க்கு பிறகு அமலாக்கப்பட்ட நவீன தாராளமய பொருளாதாரக் கொள்கை அனைத்து துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி தொழில், விவசாயம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

நம்முடைய நாட்டின் மொத்த மக்கள் தொகையில் நான்கில் மூன்று பகுதியினர் 35 வயதுக்கும் கீழ் உள்ளவர்கள் ஆகவே இதில் அடங்கியுள்ள இளைஞர் மாணவர்களின் நலன்தான் ஒட்டுமொத்த இந்தியாவின் நலனாக இருக்க முடியும்.

ஆனால் தற்போது ஆட்சியில் இருக்கும் ஒன்றிய பி.ஜேபி .அரசு இளைஞர் மாணவர் நலன், முன்னேற்றம் கல்வி, வேலை வாய்ப்பு, ஆகியவற்றை பின்னுக்கு தள்ளி சுரண்டல், அடக்குமுறை, சாதிய ஒடுக்குமுறை, மதரீதியான பாகுபாடு, வெறுப்பரசியல் ஆகியவற்றை திட்டமிட்டு உருவாக்குகிறது.

நமது அரசியலமைப்புச் சட்டம் வகுத்த நாடாளுமன்ற ஜனநாயகம் சீரழிக்கப்படுகிறது. அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தி அதன் நோக்கங்கள் அழிக்கப்படுகிறது.

விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு எதிராக இயற்றப்படும் சட்டங்களால் இந்திய நாட்டின் விவசா யிகள் தொழிலாளி வர்க்கத்தை நிறுத்தி மூச்சுத் திணற வைக்கிறது. கடந்த 45 ஆண்டு காலத்தில் இல்லாத அளவிற்கு வேலையில்லா திண்டாட்டம் தலைவி ரித்தாடுவதாக இந்திய பொருளாதார கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

பிரதமர் மோடி அவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என வாய்சவடால் அடித்தார்.

ஆனால் இதுவரை சொற்ப வேலை வாய்ப்புகளையாவது வழங்கி வந்த பொதுத்துறை நிறுவனங்களையும் விற்று வருகிறது ஒன்றிய பிஜேபி அரசு.

தனியார் துறைக்கு முன்னுரிமை தருவதால் தொழிலாளர்களின் வேலை மற்றும் ஊதியத்திற்கான உத்திரவாதத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டு விட்டது. இந்திய தொழிலாளர்கள் 50 கோடி பேரில் சுமார் 30 லட்சம் பேர் தான் பாதுகாப்பான நிரந்தர வேலைகளில் உள்ளனர்.

வேலையின்மை காரணமாக இளைஞர்களின் எதிர்காலம் இருளடைந்து கிடைக்கிறது.

இந்தியாவின் பொதுக் கல்வி முறைக்கு பேரழிவாக தேசிய கல்விக் கொள்கை 2020 வந்திருக்கிறது.

கல்வியை வணிகமாக்குவது, வகுப்புவாத தன்மை கொண்டதாக மாற்றுவது ஒன்றிய அரசின் அதிகார வளையத்துக்குள் மையப்படுத்துவது ஆகியவையே தேசிய கல்விக் கொள்கையின் நோக்கங்கள் ஆகும்.

நீதித்துறையில் ஒன்றிய அரசின் நிர்வாக தலையீடு அதிகமாக உள்ளது ஒன்றிய அரசின் மத்திய புலனாய்வுத்துறை, அமலாக்கத்துறை, வருமானவரித்துறை தேசிய புலனாய்வு முகமை ஆகிய மத்திய அரசின் கீழ் இயங்கும் அமைப்புகளை அவை நிறுவப்பட்ட நோக்கங்களுக்கு விரோதமாகஎதிர்க்கட்சிகளை அச்சுறுத்துவதற்கான கருவிகளாக ஒன்றிய அரசு அடிக்கடி பயன்படுத்தி வருகிறது.

இது தனது வலதுசாரி நிலையிலிருந்து பாசிசத்தை நோக்கி ஒன்றிய அரசு நகர்கிறது என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

தற்போதுள்ள இந்த சிக்கலான சூழ்நிலைகளை உள்வாங்கி இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியின் விஜயவாடாவில் நடைபெற்ற 24 வது அகில இந்திய மாநாடு மதசார்பின்மை,சமூகநீதி, சோசலிச செயல் திட்டங்கள்தான் இந்தியாவை பாதுகாக்கும்.

அதற்காக அனைத்து முற்போக்கு சக்திகளையும் ஒன்றுதிரட்டவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

இந்திய விடுதலை இயக்கத்தின் கனவுகளை சின்னாபின்னமாக்கி வரும் பாசிச சக்திகளிடமிருந்து தேசத்தை பாதுகாக்க வேண்டுமென்றால் சமரசமற்ற அர்ப்பணிப்பு உள்ள போராட்டங்களின் மூலம் தான் சாத்தியப்படுத்தமுடியும் என்று வழிகாட்டுகிறது..

அதற்காக வர்க்க,வெகுஜன அமைப்புகளை கட்டியெழுப்ப இலக்கு நிர்ணயத்துள்ளது.

தமிழ்நாட்டில் இளைஞர் மாணவர் அமைப்புகளில் பணியாற்றிய தோழர்கள் தற்போது இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியின் மிக முக்கிய தலைவர்களாக விளங்கிவருகின்றனர்.

நிகழ்காலத்தில் பி.ஜே.பி என்ற பாசிச பேராபாய சக்தியை வீழ்த்துவது தான் தற்போது இளைஞர் மாணவர்கள் முன் உள்ள மிக முக்கிய சவாலாகும்.

◆ ஆகவே மதவெறுப்புக்கு முன்பு மனிதநேயத்தை முன்வைப்போம்.

◆ சாதிவெறிக்கு முன்பு வேலையின்மை பிரச்சினையை முன்வைப்போம்.

ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமத்துவ வாழ்க்கை உருவாக்க முழக்கமிடுவோம். மாணவர் இளைஞர்களை ஒன்றுதிரட்டுவோம்.

வரலாறு நம்மை விடுதலைசெய்யும் சோசலிசம் வெல்லும்


டி.ராமசாமி

# தீண்டாமைக்கு எதிராக கம்யூனிஸ்ட்கள் போராட்டம்

கி.மு 1500 – 1000 நான்கு வர்ணங்கள் உருவாக்கப்பட்டது ஐந்தாவதாக பஞ்சமர்கள் இவர்கள் நான்கு வர்ணங்களில் கூட சேருவதற்கு தகுதியற்றவர்கள் பிராமணர் வேதம் ஓதுதல் சத்திரியன் ஆட்சிநடத்துவதற்கு வணிகன் வியபாரம் செய்வதற்கு சூத்திரன் அடிமையாக உழைப்பதற்கு இதில் பஞ்சமர் தகுதியற்ற அடிமைகள் இப்படி வர்ணம் மக்களை பிரித்தது உழைக்கும் மக்கள் மாக்கள் போல் நடத்தப்பட்டார்கள்.

### வர்ணங்களுக்கு சட்டப்பூர்வ வடிவமும் மனுதர்மமும்

மனுதர்மம் உருவாக்கப்பட்டதிலிருந்து அது தர்மம் அல்ல அதர்மம் என்று எதிர்ப்பு இயக்கங்கள் தோன்றியும் செயல்பட்டன.

கம்யூனிஸ்ட் கட்சியும் தோன்றிய காலத்தில் இருந்து அடிமைத்தனங்களை எதிர்த்தும், தீண்டாமை கொடுமைகளை எதிர்த்தும் போராடி வருவகிறது.

விவசாய சங்கம் அமைத்து நிலச்சுவான்தார்கள், ஜமீன்தார்கள், ஜாசிர்தாரர்கள், இனம் தாரர்கள் ஆகியோர்களை எதிர்த்து நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட வேண்டும். பாடுபடும் விவசாயிகளுக்கு பாதுகாப்பு வேண்டும் என்ற போராட்டம் தொடங்கிய போதே அடிமைத்தனத்தையும், தீண்டாமையையும் சேர்ந்தே எதிர்த்து போராடியவர்கள்.

தஞ்சை தரணியில் வளம் கொழிக்கும் நிலங்கள் நிலங்கள் அனைத்தும் நிலச்சுவான்தார்களுக்கு சொந்தம். நிலங்களில் பாடுபடுவர்கள் அடிமைகள் நில உடமையாளர்கள் ஆண்டைகள்.

1936 ல் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உருவானது தஞ்சை தரணியில் உள்ள பாடுபடும் விவசாயிகளை அடிமைகளை ஒன்று திரட்டினார் அமரர் றி.சீனிவாசராவ் சங்கம் வலுவானது நிலத்திற்கான போராட்டம் தொடர்ந்து போராடுபவர்கள் மீது நிலச்சுவான்தார் களும் அரசாங்கமும் சேர்ந்து அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டார்கள் அடக்குமுறையை எதிர்த்து போராடி உயிர்கொடுத்தார்கள்.

இந்த போராட்டம் நிலத்திற்காக மட்டும் நடைபெறவில்லை. அதோடு சேர்ந்து அடிமைத்தனத்தை எதிர்த்தும், ஜாதிக்கொடுமைகள் போக்கவும், தீண்டாமையை ஒழிக்கவும் சேர்ந்தே போராடினார்கள். போராட்டத்தின் விளைவாக கூலி உயர்வு, சாதிசமத்துவம் நிலஉச்சவரம்பு நிலமற்றவர்களுக்கு நிலம் கிடைத்தது இதற்கு விவசாயிகள் சங்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் தலைமையேற்று நடத்தியது



1938 இராஜபாளையத்தில் கம்யூனிஸ்ட் கட்சி கிளை தொடங்கப்பட்டது கிளையில் சத்ரிய வம்சத்தை சேர்ந்த பங்காரு ராஜா கட்சி உறுப்பினராக சேர்ந்தார். கிளையின் செயலாளராக பொறுப்பேற்றார். வீட்டிற்கு அனைத்து சாதியினரும் வந்து சென்றனர் கடுமையான சாதிவேறுபாடுகள் நிலவிய காலம். அதிலும் சத்ரிய வம்சம் ஆதிக்க வம்சம். இவர் வீடு ராஜாக்கள் கோட்டைக்குள் உள்ளது. பங்காருராஜாவிற்கு கம்யூனிஸ்ட் கொள்கையின் மீது பிடிப்பு, சாதி பேதங்கள் கிடையாது. இதை சத்ரிய வம்சம் ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை சமூக பகிஷ் காரம் செய்தனர். அஞ்சவில்லை தோழர் பங்காரு. எல்லா சாதியினரும் வந்து சென்றனர். பள்ளன், பறையன் எப்படி ராஜா கோட்டைக்குள் வரலாம் என்ற குரல் எழுந்தது. பங்காரு பொருட்படுத்தவில்லை. பள்ள பங்காரு என்று பெயர் சூட்டினர் இன்னும் பங்காரு ராஜா பள்ள பங்காரவே திகழ்கினர்.

தஞ்சை தரணியை தொடர்ந்து இராமநாதபுரம் மாவட்டம் தற்போது விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு பகுதியில் விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டது

பாடுபடாதவர்களுக்கு எதுக்கு நிலம்? மீன் சாப்பிடாதவர்களுக்கு எதற்கு கண்மாய் மீன் பாசி உரிமை என்ற அடிப்படையில் போராட்டம் தொடங்கப்பட்டது. நிலங்கள் அனைத்தும் பிராமணர்கள் வசம் இருந்தது. பிராமணர்க்கு கட்டுப்பட்டு அனைத்து சமுதாயமும் இருந்தது. நிலப்போராட்டத்தோடு பிராமண ஆதிக்கம் சாதி ஆதிக்கத்தை எதிர்த்த போராட்டமும் நடைபெற்றது. பிராமணர் தெருக்களில் குடியானவர்கள் குடைபிடித்து, தோளில் துண்டு அணிந்து, காலில் செருப்பு போட்டு நடக்ககூடாது. இந்த ஆதிக்கத்தை எதிர்த்து போராடினர்கள் குழாயில் தண்ணீர் எடுக்ககூடாது, ஊரணியில் குளிக்ககூடாது, என்பதையும் எதிர்த்து போராடினர்கள்.

வத்திராயிருப்பில் ஊருக்கு மேற்கே வைத்தியநாதய்யர் ஊரணி இருக்கிறது. இந்தஊரணிக்கு வயல்வெளிகளில் இருந்து கழிவு தண்ணீர் செல்லும். இந்தஊரணியில் 8 படித்துறை உள்ளது. 7 படித்துறை பிராமண சமுதாயம் குளிப்பதற்கு. 1 படித்துறை மட்டும் மற்ற சமூகத்திற்கு பட்டியல் இன மக்கள் ஊரணியில் குளிக்ககூடாது என்று கட்டுப்பாடு. இதை எதிர்த்து ஏ.சீனிவாசன் படிக்கும் போது பட்டியல் சமுதாய மாணவர்களையும் திரட்டி ஊரணியில் குளிக்க வைத்தரர்கள். அதன் காரணமாக அவர் வத்திராயிருப்பு பள்ளியில் இருந்து நீக்கப்பட்டார்.

வயல்வெளிகளில் வேலை செய்வது பெரும்பாலும் பட்டியல் இண மக்களும், பின்தங்கிய மக்களும் தான். இவர்கள் வேலை செய்யும் போது மனிதக்கழிவுகள் எல்லாம் கழிவு நீரில் கலந்து ஊரணிக்கு வருகிறது. அந்த தண்ணீர் ஊரணிக்கு வந்தவுடன் புனிதமாகி விடுகிறதா? அந்த தண்ணீர் பட்டியல் இன மக்கள் குளிக்க கூடாதா? என்று கேள்வியை எழுப்பியது போராட்டம் கம்யூனிஸ்ட் அதன் பின்பு அனைவரும் குளிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது

கம்யூனிஸ்ட்கள் இப்படி தொடர்ந்து போராடி தீண்டாமை கொடுமையை எதிர்த்தும், அடிமைத்தனத்தை எதிர்த்தும், சாதியபாகுபாடுகளை எதிர்த்தும், சமத்துவத்திற்காக தொடர்ந்து போராடி வருகிறார்கள். கடந்த 98 ஆண்டுகளில் எண்ணற்ற தியாகங்களையும், உயிர்ப்பலிகளையும் கொடுத்து போராடி வருகிறது தொடர்ந்து போராடுவோம்.

சாதிகள் அற்ற சமூகம் காண கம்யூனிட்கள் பின்னல் அணிவகுப்போம்.

# தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோற்றம்

**தேசவிடுதலை இயக்கம், பாட்டாளி வர்க்க இயக்கம், சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றோடு இணைந்த வகையில் தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் உருப்பெற்றது.**

1925 டிசம்பர் 26ல் கான்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டபோது, அந்த துவக்கத்திற்கு தலைமை தாங்கி, கொள்கை நிலையை வெளியிட்ட ம.சிங்காரவேலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்றாலும், அன்றைய சூழலில் தமிழ் நாட்டில் அமைப்பு ரீதியாக கட்சி உருவாகவில்லை.

1905ல் நடைபெற்ற முதலாவது ருஷ்யப் புரட்சியை பாரதி ஆதரித்தார். 1917ல் நடைபெற்ற சோலிசப் புரட்சியை பாரதி வரவேற்றார். தேச விடுதலை என்பதே 'சமரச சன்மார்க்கம் என்றார் தியாகச் செம்மல் சுப்பிரமணிய சிவா. 1920ல் திரு.வி.க. தனது நவசக்தி ஏட்டை துவங்கி, ஜனநாயகம், தொழிலாளர் நலன், பெண் விடுதலை, சாதி ஒழிப்பு, இந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைக் கொண்ட சமதர்ம சன்மார்க்கத்தை லட்சியமாக பிரகடனப் படுத்தினார்.

முதலாம் உலகப் போர் முடிந்தவுடன் எம்.பி.டி. ஆச்சாரியா மாஸ்கோ சென்று லெனினைச் சந்தித்தார். 1921ல் சிங்கார வேலர் காந்திஜிக்கு பகிரங்கக் கடிதம் எழுதி, இந்திய விடுத லையின் லட்சியம் சமதர்மமாகவே இருக்க முடியும்' என பிரகட னப்படுத்தினார்.

1920களில் சமதர்மக் கருத்துக்களை சிங்காரவேலர், திரு.வி.க. சர்கரைச் செட்டியார், சுப்பிரமணிய சிவா போன்றோர் பரப்பினர். சமதர்மத்திற்கான தேடல் நிறைந்த காலம்.

1923 ஆம் ஆண்டு பாட்டாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைத் திருநாளான மேதினம் இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னையில் சிங்கார வேலரால் கொண்டாடப்பட்டது.

1924ம் ஆண்டு மாமேதை லெனின் மறைந்த போது சிங் கார வேலர் நடத்திய லேபர் கிஸான் கெசட்டில் அஞ்சலி செலுத் தியதோடு அஞ்சலி கட்டுரையையும் எழுதினார்.

1925ம் ஆண்டு கான்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் அமைப்புரீதியாக உருவானது; ஆயினும் தமிழ்நாட்டில் கட்சி அமைப்பு உருவாகி விடவில்லை, அதற்காக 12 ஆண்டுகள் பாடுபட வேண்டியிருந்தது. கட்சி அமைப்பு உருவாகவும், அரசியல் கொள்கை வளரவும் சிங்காரவேலர் அயராது பாடுபட்டார்.

தந்தைப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தோடு சிங்கார வேலர் தீவிரமாகப் பணியாற்றினார். சிங்காரவேலர் – பெரியார் உறவு, பெரியாரை சமதர்மம் நோக்கி திருப்பியது. பெரியார் சோவியத் யூனியனுக்கு சென்று திரும்பியதன் விளைவாக சோசலிசக் கருத்துக்கள் மீது அவருக்கு மேலும் ஆர்வம் ஏற்பட்டது.

1932 டிசம்பரில் ஈரோட்டில் பெரியாரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சுயமரியாதை சமதர்மக் கட்சி என்ற அமைப்பை உருவாக்குவதற்கான திட்டத்தை சிங்காரவேலர் முன் மொழிந்தார். அது ஈரோட்டுத் திட்டம் என்று அழைக்கப்பட்டது.

இந்தியாவுக்கு முழு விடுதலை, தேசக் கடன்கள் முழுவதும் ரத்து, தொழில்சாலைகள், வங்கிகள், ரயில்வே ஆகியவை தேசியமயம், காடுகள் விவசாய நிலம் மக்களின் உரிமை, விவசாய கடன் ரத்து, ஏழு மணிநேர வேலை, சுதேச சமஸ்தானங்களை ஒழித்தல், இந்தியாவில் தொழிலாளர் விவசாயிகள் ஆட்சியை கொண்டு வருதல், இவைகள் தான் ஈரோட்டுத் திட்டம்' இத்திட்டத்தை விளக்கி தமிழகமெங்கும் சுயமரியாதை சமதர்ம மாநாடுகள் நடைபெற்றன. பெரியார், சிங்காரவேலர், ஜீவானந்தம் ஆகியோர் அயராது பாடுபட்டு தமிழகம் முழுவதும் சுயமரியாதை சமதர்ம இயக்கத்தின் கிளைகளை உருவாக்கினர்.

சுயமரியாதை இயக்கத்திற்குள் சமதர்மப் போக்கை விரும் பாதவர்கள் ஆங்கிலேயரின் ஆட்சியை பகைத்துக் கொள்ளாமல், சமூக சீர்திருத்தங்களை ஆதரித்தால் போதும் என்று பெரியாரை வலியுறுத்தி வந்தனர்.

பெரியார் கைது, பெரியாரின் நீதிக்கட்சி ஆதரவு, நீதிக் கட்சியின் வற்புறுத்தல் இவைகளால் பெரியார் ஈரோட்டுத் திட்டத்தை கைவிட்டார். 1936 பிப்ரவரியில் திருத்துறைப்பூண்டியில், கூடிய மாநாட்டில் உருவான சுயமரியாதை சமதர்ம கட்சி 1936 நவம்பரில் திருச்சியில் கூடிய மாநாட்டில் கலைக்கப்பட்டு, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியுடன் இணைவது என்று முடிவெடுக்கப்பட்டது.

1934ல் தடைசெய்யப்பட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமறைவாக செயல்பட்டு கொண்டு இருந்தது. இந்தியக்

தொடர்ச்சி 9 ஆம் பக்கம்

# நிலைகுலையாத மாவீரர் கேடிகே



டி.எம்.மூர்த்தி





**இப்போது நான் எந்த வயதில் இருக்கிறேனோ, அந்த வயதில் தோழர் கேடிகே இருக்கும்போது அவரை முதல் முதலாக சந்தித்தேன். எமர்ஜென்சி முடிந்த அடுத்த ஆண்டு.**

### அவரைப் பற்றி...!

அவர் ஒரு பெரிய கோடீஸ்வரர் குடும்பத்தைச் சேர்ந்தவர். அந்தக் காலத்திலேயே இறக்குமதி ஏற்றுமதி வணிகத்து ஈடுபட்ட குடும்பம் அவருடையது. டி.வி.எஸ். நிறுவன உரிமையாளரான கிருஷ்ணாவும் அவரும் நண்பர்கள். லண்டனில் படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். இந்திரா காந்தியின் கணவர் ஃபெரோஸ் காந்தியின் கல்லூரித் தோழர். ஹாக்கி விளையாட்டு வீரர். நேரு குடும்பத்துடன் நெருக்கமாய் இருந்தவர். இலங்கை மலேசியா ஆகிய நாடுகளில் வழக்கறிஞர் தொழில் நடத்தியவர். தினத்தந்தி நிறுவன சி.பா. ஆதித்தனார் அவரும் ஒரே வீட்டில் பெண்ணெடுத்தவர்கள்.

விடுதலைப் போராட்ட வீரர். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் சட்டப்பேரவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர். இவ்வாறெல்லாம் அவரைப் பற்றி பலரும் எனக்கு கூறியிருக்கிறார்கள்.

நான் கல்லூரி முடித்து அப்போதுதான் வெளிவந்திருந்தேன். அனைத்திந்திய மாணவர்கள் மன்றத்தில் உறுப்பினர். திருப்பரங்குன்றத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் ஒரு கிளை அப்போதுதான் அமைத்திருந்தோம். கையால் எழுதப்பட்ட பிரதிகள் ஐந்து சுற்றுக்கு விடப்படும் ஒரு மாத இதழை நடத்தி வந்தோம்.

அவர் மதுரை ஐக்கிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தில் ஒரு கூட்டத்தில் பேசுவதாக பேச இருந்தார். மதுரை கோட்ஸ் மில்லில் பணிபுரிந்த தோழர் ராமசுப்பிரமணியன் என்னை அந்த கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார்.

அன்றிருந்த பஞ்சாலை தொழிலாளர் சங்க அலுவலக அறை மிகவும் சிறியது. அவர் அமர்ந்திருந்த நாற்காலியை சுற்றி இடமே இல்லாமல் கூட்டம். 30 பேர் அமரத்தக்க அந்த அறையில் 50க்கும் அதிகமானோர் நெருக்கியடித்து உட்கார்ந்து இருந்திருந்தார்கள்.

சம்பள உயர்வு கோரி நடைபெற இருந்த மாநிலம் தழுவிய பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டம் சம்பந்தமாக அவர் பேசிக் கொண்டிருந்தார்.

அடுத்த ஆண்டிலேயே அந்த சங்கத்தில் முழு நேர ஊழியராகச் சேரப் போகிறேன், அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைக்குப் போகப் போகிறேன் என்று எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

### படிமங்களை உடைத்தவர்!

இஸ்திரி போட்டு மடித்த அடையாளங்களை தெரியாத வெள்ளை சட்டை. அதேபோன்று தூய வெண்மையைத் தொலைத்திருந்த வேட்டி. தோளில் சல்லடை போன்று இருந்த கரை போட்ட ஒரு சிவப்பு நிற அருவித் துண்டு. சட்டைப் பையில் பெரிய கட்டைப் பேனா. கையில் மஞ்சள் பை.

நேரில் அவரைக் காணும் முன்பு என் மனதில் அவரைப் பற்றி எனது மனதுக்குள் ஒரு சித்திரம் வைத்திருந்தேன். அதற்கும், நேரில் கண்ட அவரது தோற்றம், பழக்கத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

தோழர் தா.பாண்டியன் அவர்களின் ஏற்ற இறக்கம் நிறைந்த கம்பீரமான பேச்சை மேடைகளில் கேட்டு, தலைவர்கள் அப்படித்தான் பேசுவார்கள் என்று நினைத்திருந்தேன்.

கே.டி.கே. அந்தப் படிமத்தையும் உடைத்தார். சிறு சிறு வாக்கியங்கள். குரலை உயர்த்தவே இல்லை. ஒரு உரையாடுகிற நடையில் தான் பேசிக் கொண்டிருந்தார்.

முதல் பார்வையில் என் எதிர்பார்ப்புகளை எல்லாம் பொய்ப்பித்த அந்த மனிதர் மறையும்



வரையில், 22 ஆண்டுகள் நெருக்கமாகப் பழகியிருக்கிறேன். அவரைவிட மேலாக என்னை ஈர்த்த மனிதர் யாருமில்லை என்ற நிலையில் நெஞ்சில் நிலைத்து தங்கி யிருக்கிறார்.

### சலனமில்லாத உறுதி!

பெருமதிப்புக்குரிய தியாகி ஐ.மாயாண்டி பாரதி "உங்க ஆளு சரியான முரடனப்பா" என்று இந்தக் கதையைச் சொன்னார்.

'ஒரு முறை வேலூர் சிறையில் நாங்கள் இருந்தோம். 39 நாள்வரை அவர் உண்ணா விரதம் இருந்தார். அடி சரியான அடி. எப்படி முயன்றாலும் சாப்பிடமாட்டார். காவலர்கள் அவரது வாயை வலுக்கட்டாயமாகத் திறந்து, குழாயைவிட்டுக் கஞ்சியை ஊற்றுவார்கள். அப்போதும் அவர் விழுங்காமல் துப்புவார். சட்டையிலும், மார்பிலும், வயிற்றிலும் கஞ்சி கொட்டிக் கிடக்கும். தினமும் அப்படி ஊற்றுவார்கள். அப்படியே காய்ந்து அப்பியிருக்கும். தாடி, சவரம் கிடையாது. அடையாளமே கண்டுபிடிக்க முடியாது.

அவருடைய உடம்பில் பல தழும்புகள் உண்டு. ஒவ்வொரு தழும்புக்கும் ஒரு கதை உண்டு"

### நெற்றித் தழும்பு!

அவர் நெற்றியில் குறுக்கு வெட்டாக ஒரு தழும்பு உண்டு. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, ஒரு நாள் நேரு அவரிடம் 'இவ்வளவு அமைதியான நீங்கள் எப்படி அந்த இம்சை கட்சியில் இருக்கிறீர்கள்' என்று கேட்டாராம். அவரிடம் தனது நெற்றித் தழும்பைக் காட்டி, "உங்கள் அகிம்சை கட்சி தந்த பரிசு இது" என்றாராம் கே.டி.கே. ஒன்றும் பேசாமல் நகர்ந்து விட்டார் நேரு என்று சொல்லி சிரிப்பார் கே.டி.கே.

### நானும் கைதாகிறேன்!

போலீஸ் என்ற உடனே அந்த முரட்டுத்தனம் அவரைப் பற்றிக் கொள்ளும். நான் நேரில் பார்த்த நிகழ்வு இது.

கே.டி.கே., நான், டி.ஆர்.எஸ். மணி ஆகியோர் வேறொரு பணிக்காக மதுரை சென்றிருந்தோம். தோழர் எம்.சரவணன் வந்து, செல்லூரில் கைத்தறி தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி போராடுவதாகவும், கே.டி.கே. வந்தால் நல்லது என்றும் அழைத்தார். வந்த வேலையை மறந்து கே.டி.கே. கிளம்பினார்; கூடவே நானும் டி.ஆர்.எஸ்.ஸும். அங்கே போனபோது ஒரே போலீஸ் மயம். ஒலிபெருக்கி அனுமதி தரப்படவில்லை. கைத்தறி தொழிலாளர்கள் அரைவட்டமாக தரையில் அமர்ந்திருக்க, உள்ளூர் தலைவர்கள் உரையாற்றிக் கொண்டிருந்தனர். ஒரே பதட்ட நிலை.

ஆட்டோவிலிருந்து நாங்கள் இறங்கியதும், காவல்துறை உயரதிகாரி வேகமாய் கே.டி.கே.விடம் வந்தார். "ஐயா! அனுமதி ரத்து செய்திருக்கிறோம். நீங்கள் அவர்களை உடனடியாகக் கலைந்து போகுமாறு சொல்லி, சட்டம் ஒழுங்கை பாதுகாக்க உதவவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

கே.டி.கே. கூட்டத்துக்குள், நுழைந்து நடுவில் போய் நின்றார். எல்லோரும் எழுந்து வரவேற்றனர். அவராக உரத்த குரலில் பேசத் தொடங்கினார். 'உங்களைக் கலைந்து போகச் சொல்லுமாறு போலீஸ் அதிகாரி என்னிடம் கேட்டுக் கொண்டார். தொழிலாளி போராடும்போது, கூட்டம் போட்டு தமது பிரச்சினையைப் பேசக்கூட காவல்துறையிடம் அனுமதி வாங்க வேண்டும் என்பது நியாயமில்லை. ஒலிபெருக்கி தரமாட்டோம் என்கிறார்கள். சரி பயன்படுத்த வேண்டாம். ஆனால் நாம் பேசுவோம். யாரும் எதற்கும் அசையாதீர்கள். எல்லாத் தலைவர்களும் பேசுவார்கள். போலீஸ் கைது செய்யட்டும். நானும் உங்களோடு அரெஸ்ட் ஆகிறேன்' என்றார்.

ஒரே ஆரவாரம். போலீஸ் சுற்றி வளைத்து நின்றும் யாரும் அஞ்சவுமில்லை; நகரவும் இல்லை. எல்லோரும் பேசியபின்பு, கே.டி.கே. வாழ்த்திப் பேசினார். கூட்டத்தையே கைது செய்தது காவல்துறை.

அனைவரையும் கைது செய்தபின், கே.டி.கே.யை ஜீப்பில் ஏற்றி காவல்நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். நான், மறைந்த ஜான் மோசஸ், இன்னும் சிலர் அவரோடு இருந்தோம்.

கைது செய்யப்பட்ட தொழிலாளர்களை வேறு இடத்துக்கு கொண்டு சென்று விட்டார்கள். கே.டி.கே.வுக்கு வந்த கோபத்தைப் பார்க்க வேண்டுமே! உடனே தொழிலாளர்களிடம் கொண்டு செல்லுமாறு கூறி வெளியேற முயற்சித்தார். விடுதலை செய்வதாகச் சொன்னபோதும், தொழிலாளர்கள் இருந்த இடத்துக்கு அழைத்துச் செல்லச் சொல்லி அங்கிருந்துதான் விடுதலையானார்.

### சாகும் வரை கட்சிதான்; செத்தாலும் கட்சி தான்

மதுரைச் சிறையில் ஒரு முறை என்னிடம் சொன்னார்:

"அந்த மாமரத்துக்கு பக்கத்தில் உள்ள தனிமைக் கொட்டடியில் தான் என்னை வைத்திருந்தார்கள். ஒருநாள் என் ஆடைகளைக் களைந்து, கைகளைப் பின்புறமாகக் கட்டி, வெயிலில் குப்புறப்படுக்கப் போட்டு மலத்தைக் கரைத்து என் மீது ஊற்றிவிட்டுப் போனார்கள். கட்சியில் இல்லைன்னு எழுதிக் கொடுத்துட்டு வீட்டுக்குப் போடா, இல்லையின்னா இங்கதான் உனக்கு சாவு என்றார் ஒரு கான்விக்ட் வார்டர்.

ஜெயில் காவலர் "கம்யூனிஸ்ட் வாழ்க"ன்னு இப்பச் சொல்லுடா" என்று இளக்காரமாகச் சிரித்தான். சீமான் வீட்டுப் பிள்ளை, சீமையிலே படித்தவர். அசிங்கப்படுவது பொறுக்காமல் போய் விடுவான் என்பதுதான் அவர்களின் எண்ணம்.

அப்போதுநான் "சாகும்வரை கம்யூனிஸ்ட் கட்சியை விட்டுப் போகமாட்டேன்; செத்தாலும் போகமாட்டேன்" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டேன்.

அவர் இதைச் சொன்னபோது, ஏதோ பஸ்ஸிலிருந்து இறங்கி வருகிறேன் என்று சொல்வதுபோல சாதாரணமாகச் சொன்னார். அந்த நொடியில் நான் சிலிர்த்துப் போனேன்.

### சொன்னபடி வாழ்ந்தவர்

அவரது இறுதிக்காலம், கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலத் தலைமையகமான பாலன் இல்லத்தின் சிறிய அறையில்தான் கழிந்தது.

தனது எந்த வைராக்கியத்தையும் இழந்து விடாமல், 88 ஆண்டு காலம் துடித்து வந்த அந்த இரும்பு இதயம் ஒய்வு எடுத்தது.

அவர் உயிர் துறந்த 2001 டிசம்பர் 26ம் தேதி, எந்தக் கட்சியை தனது உயிர் மூச்சாக நேசித்தாரோ அந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 76 வது அமைப்பு தினம்.

அவரது உறவினர்களான பெரும் செல்வந்தர்கள், அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்துக்குத்தான் வரவேண்டி யிருந்தது.

தோழர் கே.டி.கே. திருப்பெயர் நீடூழி வாழ்க!

# தோழர் நல்லகண்ணு பன்னெடுங்காலம் வாழ்க.!



எஸ்.காசிவிஸ்வநாதன்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு கட்சியில் உறுப்பினராக சேரும் பொழுது கட்சிக்கு வயது 17.**

15 வயதிலேயே நெல்லை மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தெருக்களிலே இந்திய விடுதலைக்கு முழக்கமிட்ட சின்னஞ் சிறு இளைஞர். அடிமைப்பட்டு கிடக்கும் இந்தியாவிற்கு என்று விடுதலை வரும் என்ற தாகம் நெஞ்சிலே தேங்கி கிடந்த நேரம், இளைஞர்களுடன் வீதிகளிலே மகாகவி பாரதியின் 'என்று தனியும் இந்த சுதந்திர தாகம் என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்' கவிதையை பாடிக்கொண்டே செல்வாராம்.

கம்யூனிஸ்ட் கட்சி நெல்லை மாவட்டத்தில் முளைவிடத் தொடங்கும் போதே சதி வழக்குகள் பாய்ந்தன. மலையாளமண்ணிலிருந்து அமைப்பாளராக இராமச்சந்திர நெடுங்காடி வந்தார். அவர் மீதும் கழுகுமலை அழகிரி முத்தையா வஜ்ரவேல் போன்ற கம்யூனிஸ்ட் தோழர்கள் மீதும் நெல்லைச் சதி வழக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தால் 1940 ஆம் ஆண்டு போடப்பட்டது.

பாலதண்டாயுதம், ப.மாணிக்கம் , மீனாட்சி நாதன், பேராசிரியர் வானமாமலை , வழக்கறிஞர் என்.டி. வானமாமலை, வி.எஸ். காந்தி, வேலுச்சாமி தேவர் போன்றவர்களால் ஈர்க்கப்பட்ட நல்லகண்ணு 1943ம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். நாங்குநேரி,களக்காடு பகுதிகளில் கட்சியின் அமைப்பாளராக செயல்பட்டார். நெருக்கடியான தலைமறைவு வாழ்க்கையில் விவசாய சங்கத்தில் பணிபுரிந்தார். எண்ணற்ற போராட்டங்கள் . 1946 ஆம் ஆண்டு ஜனசக்தியின் பணி செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டார். தேச விடுதலைக்குப் பின் திரும்பி வந்து கட்சிப் பணிகளை தொடர்ந்தார். கட்சி மீண்டும் தடை செய்யப்பட்டது. தலைமறைவு வாழ்க்கையில் பட்ட இன்னல்கள் ஏராளம் .


1948 ம் ஆண்டு நெல்லைச் சதிவழக்கு 109 தோழர்கள் மீது போடப்பட்டது. ஒன்னறையாண்டு சிறைவாசத்திற்கு பிறகு 42 தோழர்கள் விடுவிக்கப்பட்டனர். 67 தோழர்கள் மீது வழக்கு நடந்தது. நல்லகண்ணுவிற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் ஏழாண்டாக குறைக்கப்பட்டது.

விடுதலைக்குப் பின்பு 1958ஆம் ஆண்டு பேராசிரியர் நா. வானமாமலை தலைமையில் திருமணம் நடைபெற்றது. ரஞ்சிதத்தை கரம்பிடித்தார். இரண்டு பெண் குழந்தைகள். அன்னை ரஞ்சிதம் ஆசிரியரானதால் குடும்பம் நடைபெற்றது.

1948 ஆம் ஆண்டிலேயே இளைஞர் ஆர். நல்லகண்ணு அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த தலைவராக வருவார் என்று விவசாயிகள் இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர் பி.சீனிவாச ராவ் எழுதியுள்ளார்.

1990களின் நடுவில் சாதி கலவரம் தென் மாவட்டங்களில் தலை விரித்து ஆடியது. சாதி மோதல்கள் நடைபெற்ற இடங்களுக்கெல்லாம் கட்சியின் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கன்னியாகுமரியில் இருந்து மதுரைக்கு பிரச்சார இயக்கத்தை கட்சி மேற்கொண்டது. தலைமையேற்ற மாநிலச் செயலாளர் நல்லகண்ணு அவர்களுக்கு பி.ஏ.வாக பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிடைத்தது.

ஆர்என்கே, சட்டமன்ற குழு தலைவர் ஜி. பழனிச்சாமி, நாம் ஆகிய மூவரும் ஒரே காரிலேயே பயணம் செய்தோம்.







சாதி மோதல்களை குறைப்பது என்பதை பற்றி ஜிபியுடன் விவாதித்து போக்குவரத்து கழகங்களுக்கும், மாவட்டங்களுக்கும் வைக்கப்பட்டுள்ள பெயர்களை எடுத்து விட்டால் சண்டைகள் ஓரளவு குளையும். ஆனால் எப்படி சொல்லுவது.. சொன்னால் ஏற்றுக் கொள்வார்களா..தீவிரமான ஆலோசனையில் இருந்தார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போதுதான் இந்தக் கருத்தை வலியுறுத்தி பேசினார்.

சங்கர்நகரை அடுத்துள்ள துறையூருக்கு சென்றோம். சாதி வெறியால் பாதிக்கப்பட்ட கிராமம்.அப்பொழுது தான் பிறந்த கைக்குழந்தைடன் இளம் தாய் கதறி அழுதார். அவளுடைய கணவன் சாதீய வெறியால் கொல்லப்பட்டான். கண்களில் கண்ணீருடன் ஆறுதல் கூறினார். பயணம் தொடர்ந்தது. பல ஊர்களில் கலவரங்கள்.. கொல்லப்பட்ட சம்பவங்கள். ராஜபாளையம் துயரங்களை பார்வையிட்ட பிறகு மம்சாபுரத்திற்குச் சென்றோம்.

தந்தை கொல்லப்பட்டதால் இரண்டு சிறுவர்கள் மொட்டை அடித்திருந்நத காட்சியைப் பார்த்தார். கண்ணீருடன் ஆறுதல் கூறினார். இந்தக் காட்சிகள் கல்லுக்குள் ஈரம் இருப்பதை உணர்த்தியது. எப்பொழுதும் உணர்ச்சிகளை அடக்கி தனக்குள்ளேயே வைத்துக் கொள்ளும் நல்லகண்ணு தன்னை அறியாமல் வெளிப்படுத்திய கண்ணீர் நம்மை கலங்கச் செய்தது.

தனது மாமனார் கொல்லப்பட்ட போது வெளிப்படுத்படாத துக்கம் சாதி கலவரத்தின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டதை பார்த்த பொழுது பொங்கிய கண்ணீரைக் கண்டதை நம்மால் இன்றும் மறக்க இயலாது..

அன்றைய முதலமைச்சர் கலைஞர் கூட்டிய அனைத்துக் கட்சி கூட்டத்திலும் மாவட்டங்கள் மற்றும் போக்குவரத்து கழகங்களுக்கு வைக்கப்பட்டுள்ள பெயர்களை எடுத்து விடுங்கள் என்ற கருத்தைச் சொன்னார். அரசும் ஏற்றுக் கொண்டது. பெயர்கள் நீக்கப்பட்டது. அமைதி திரும்பியது .

தாமிரபரணி ஆற்றில் மணல் கொள்ளையடிப்பதை எதிர்த்து வழக்கு தொடர்ந்தார். மதுரை உயர்நீதிமன்றத்தில் தானே ஆஜராகி வாதங்களை எடுத்துரைத்தார். 2010 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ம் நாள் மணல் அள்ளக் கூடாது என தீர்ப்பு வந்தது. ஆனாலும் கொள்ளையர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்ட மணலை கூட விட்டு விடவில்லை . இந்தக் குற்ற சம்பவங்கள் நடைபெற்ற போது மனம் வெதும்பி பேசிய தலைவரின் வேதனையான முகம் நினைவுக்கு வருகிறது.

சிறையில் இருந்த காலத்தில் புலவர் பட்டம் பெற்றார். இலக்கியத்தில் ஆழ்ந்த இரசனை உண்டு. நல்லகண்ணு நல்ல கவிதைகளை எழுதி உள்ளார்.

கட்டுரைகள் சிறப்பாக இருந்தது என்றால் மனம் விட்டு பாராட்டத் தயங்க மாட்டார். அதே நேரம் தவறுகளை கண்டால் மென்மையாகக் கூறி சுட்டிக் காட்டுவார் . நெல்லை ஆய்வு குழு கூட்டங்களில் கலந்து கொண்டு கருத்துக்களையும் எடுத்துச் சொல்லியுள்ளார். இலக்கிய ஆளுமைகள் நா.வா. தொமுசி ரகுநாதன், தி.க.சி உட்பட பலருடன் நெருங்கிய நட்பை பேணி இருந்தார். இவர்கள் நடத்துகின்ற இலக்கிய விவாதங்களை கேட்பதற்கு மிகவும் ஆர்வமாக இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கம் எட்டயபுரத்தில் நடத்துகின்ற பாரதி விழாவில் அழைத்தாலும் அழைக்கா விட்டாலும் இரண்டு நாட்களும் முழுமையாக இருந்து விழாவை கண்டு ரசிக்கின்ற மாமனிதர்.

ஜீவாவால் ஆணையிடப்பட்டு சோ. அழகர்சாமி மற்றும் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கத்தால் தொடங்கப்பட்ட மகாகவி பாரதி விழா நின்று விடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கரையும் கவனமும் கொண்டவர். அனேகமாக ஜூலை மாதமே செப்டம்பர் மாத விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள அன்பான ஆணையிடுவார். பாரதியின் மீது தீராத காதலன் ஆர்.நல்லகண்ணு.

கவிஞர் தமிழ்ஒளியை மக்ககளுக்கு அறிமுகம் செய்ய ஒரு நூலையே எழுதியவர். சிறந்த எழுத்தாளர்.. கட்டுரையாளர் .

தொமுசி ரகுநாதன் மறைந்தவுடன் இறுதி நிகழ்வு நடத்தி முடித்த பிறகு நெல்லை கட்சி அலுவலகத்தில் பொன்னீலன் தொமுசியை பற்றிய பேட்டி எடுக்கும் போது பிரிவுத் துயர் தாங்காமல் குலுங்கி குலுங்கி அழுத காட்சிகளை நம்மால் மறக்க இயலவில்லை.. தோழர் நல்லகண்ணு பொது வாழ்வுக்கு எடுத்துக்காட்டு .. இன்றைக்கு நம்மோடு வாழ்கின்ற மகத்தான மக்கள் தலைவர்..

தோழர் ஆர்என்கே உங்கள் காலத்தில் நாங்களும் வாழ்கிறோம் ! எங்களுக்கு பெருமை ! கம்யூனிஸ்ட் பேரியக்கத்துக்குப் பெருமை ! உங்களால் நாங்கள் மதிப்பு பெறுறோம் !

இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு வயது 99 தோழர் நல்லகண்ணுவுக்கும் வயது 99.

---

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் இணைந்து பணியாற்றுவது என முடிவு செய்தது.

1934ல் ஜூலை மாதம் ஹைதர்கான் தலைமறைவாக சென்னைக்கு வந்து கட்சியை அமைப்பு ரீதியாகக் கட்டினார்.

சென்னை ஜார்ஜ் கோட்டையில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை இரவோடு இரவாக இறக்கிவிட்டு தேசியக் கொடியை ஏற்றிய பாஷ்யம் என்ற ஆர்யாவும் அமிர்ஹைதர் ஹானுடன் தொடர்பு கொண்டார். இவர்தான் சென்னை நகரத்தில் கட்சிக்கு முதல் செயலாளராக இருந்தார்.

சென்னையில் தங்கியிருந்த தோழர் சுந்தரையா பாண்டிச்சேரி, வ.சுப்பையா ஆகியோருடன் அமீர் ஹைதர்கான் தொடர்பு கொண் டார்.

1936 ல் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் ஜீவா, சீனிவாசராவ், பி.ராமமூர்த்தி, எ.எஸ்.கே.அய்யங்கார், கே.முருகேசன், இளங்கோ போன்றோர் செயலாற்றினார்.

1936ம் பம்பாயிலிருந்து எஸ்.வி.காட்டே நாடு கடத்தப்பட்டு சென்னைக்கு வந்தார். இவரும் தமிழ்நாட்டில் கட்சி அமைப்பை உருவாக்க வழி காட்டினார். இவரின் வழிகாட்டுதல்களின் கீழ் பி.சீனிவாசராவ், ப.ஜீவானந்தம், பி. ராமமூர்த்தி, சி.எஸ். சுப்பிரமணியம், ஏ.எஸ்.கே.அய்யங்கார், கே.முருகேசன் ஆகிய தலைவர்கள் பணியாற்றினர். இவர்கள் பங்கேற்ற அமைப்பு கம்யூனிஸ்ட் "செல்" என்று அழைக்கப்பட்டது. இதற்கு செயலாளர் என்று யாரும் கிடையாது. கூட்ட நிகழ்ச்சிகளை பதிவேடு எழுதுபவரே செயலாளராக கருதப்பட்டார். தோழர் சி.சுப்பிரமணியம் இந்தப் பணியை செய்ததால் அவரே செயலாளராக இருந்தார்.

1936ம் ஆண்டு விவசாய சங்கம் உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில் சென்னை மாணவர் சங்கமும் துவக்கப்பட்டது. 1937ல் ஜனசக்தி துவங்கப்பட்டது.

1936–38ம் ஆண்டுகளில் தமிழகத்தில் கட்சியின் கட்டமைப்பு அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டு விட்டது. பல துறைகளில் கட்சி செயல்பட ஆரம்பித்தது. தொழிலாளர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம், மாணவர்கள் போராட்டம் என பல நிலைகளில் போராட்டங்கள் நடைபெற்றன.

1938 ம் ஆண்டு இங்கிலாந்தில் கல்வி பயின்று கொண்டிருந்த மோகன் குமாரமங்கலம், சி.எஸ் சுப்பிரமணியம் ஆகியோர் கம்யூனிஸ்ட்களுடன் இணைந்து இயக்க வேலைகளைத் தீவிரப்படுத்தினர். அப்போது அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பட்டம் படித்த சுப்பிரமணிய சர்மாவும், பி.ராமமூர்த்தியும் கட்சியில் இணைந்து செயலாற்றினர்.

1939 கட்சி மீது தடை விதிக்கப்பட்ட போதும் கட்சியின் வெகு ஜனப் போராட்டங்களை தடுத்து நிறுத்த முடியவில்லை. தமிழ கத்தில் இனியும் கட்சியை வளரவிடாமல் தடுக்கும் நோக்கோடு 1940–41 சென்னை சதிவழக்கு போடப்பட்டது. இதைத் தொடர்ந்து கோவை சதி வழக்கு, நெல்லை சதிவழக்கு என்று பலப்பல சதி வழக்குகள் தொடர்ந்தது.



வ.மணிமாறன்

## சமூக ஊடகங்களும் கம்யூனிஸ்டுகளும்

# போலி செய்திகளை கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும்?

**புத்தகங்கள், பத்திரிகைகள் தான் ஒரு காலத்தில் ஊடகங்களாக இருந்தன. அவற்றின் மூலம் மக்களிடம் கருத்துகள் எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றைத் தடுப்பதற்கு அன்றைய அரசு அடக்குமுறைகளை ஏவி விட்டது. தணிக்கை சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றையும் மீறி மக்களிடம் கருத்துக்கள் பரவிக் கொண்டிருந்தன.**

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்க மக்கள் கிளர்ந்து எழுந்தனர்.

கடந்த நூறு ஆண்டுகளில் பெரும் மாற்றம். பத்திரிகைகள், நூல்கள் என்றிருந்த அச்சு ஊடகம், இன்றைக்கு காட்சி ஊடகம், டிஜிட்டல் ஊடகம், சமூக ஊடகம் என விரிந்து பரவியுள்ளது. திறன்பேசி (ஸ்மார்ட் போன்) வைத்திருக்கும் ஒவ்வொருவரும் ஊடகமாக செயல்படக்கூடிய வாய்ப்பு உருவாகி இருக்கிறது.

இந்தியாவில் 110 கோடி கைப்பேசி (மொபைல்) இணைப்புகள் உள்ளன. இது மொத்த மக்கள் தொகையில் 77 விழுக்காடு ஆகும். இவர்களில் 70 கோடி பேர் இணையத்தை (இன்டர்நெட்) பயன்படுத்துகின்றனர்.

சமூக ஊடகங்களில், வாட்ஸ்அப் செயலியை 48 கோடி பேர் பயன்படுத்துகின்றனர். முகநூலில் (பேஸ்புக்) 31 கோடி பேர் உள்ளனர். இணைய இணைப்பு வைத்திருப்பவர்களில் 45 விழுக்காட்டினருக்கு முகநூல் விளம்பரங்கள் செல்கின்றன.

யூடியூப் வலைக்காட்சியை 46 கோடி பேரும், இன்ஸ்டாகிராமை 23 கோடி பேரும் பயன்படுத்துகின்றனர். இந்த சமூக ஊடகங்கள் மக்களிடம் கருத்துகளை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன.

பத்திரிகை, தொலைக்காட்சியை விட சமூக ஊடகங்கள் இருவழி தொடர்புக்கானதாக உள்ளது. பதிவிடப்படும் கருத்துகளை, காட்சிகளை பார்ப்பவர்கள்/ படிப்பவர்கள் உடனடியாக எதிர் வினையாற்ற முடியும். அரசுகள் தடுக்க நினைப்பதையும், தொலைக்காட்சிகள் ஒளிபரப்பமறுப்பதையும் வெளி உலகுக்கு கொண்டுவர முடியும். பாதிக்கப்பட்டவர்களுக்கு எளிதாக உதவ முடிகிறது. பாதிப்புகளை அடையாளம் காண முடிகிறது. அமைப்பாகத் திரள வாய்ப்பு உருவாகிறது. நாடு கடந்து, உலகு தழுவிய ஒன்றாக மாற்ற முடியும். இப்படி பல வாய்ப்புகளை சமூக ஊடகங்கள் திறந்து விட்டுள்ளன.

ஊடகங்களின் பெருக்கத்தால் அதிகமான தகவல்கள் மக்களை தேடி வருகின்றன. மக்கள் விரும்புவதை விட, மக்களின் தேவைகளை விட அதிகமான தகவல்கள் அவர்களிடம் கொட்டுகின்றன.


இவையெல்லாம் பொதுப் புத்திக்கு, பொதுக்கருத்துக்கு எதிராக உள்ளதா? மாறுபட்டு இருக்கிறதா?

மக்கள் பொதுவாக ஏற்றுக் கொண்டுள்ள கருத்துகளை பொதுக் கருத்து அல்லது பொதுப் புத்தி (Public Opinion) என்று சொல்லலாம். நிலவக்கூடிய சமூக அமைப்புக்கு, ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்கு இயைந்ததாக இருப்பதுதான் இந்தப் பொதுப்புத்தி.



ஆளும் கருத்தியலுக்கு, ஆளும் சித்தாந்தத்துக்கு இணக்கமாக மக்களை சிந்திக்க வைப்பது தான் இந்தப்பொதுப்புத்தி. பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் பொதுப் புத்திக்கு மாறுபட்டதாகவோ எதிரானதாகவோ செய்திகளை தருவதில்லை. “மக்கள் விரும்புவதை கொடுக்கிறோம்” என்று ஊடகங்கள் சொல்வதும் இதைத்தான். “மக்களுடைய துயரங்களை எடுத்துரைக்கிறோம். மக்களுடைய வலிகளைச் சொல்கிறோம். அரசு மறைப்பதையும் மக்களுக்கு கவனப்படுத்துகிறோம்” இவையெல்லாம் ஊடகங்கள் சொல்பவை. ஆனால், அந்த துயரங்களோ வலிகளோ எதனால் ஏற்படுகின்றன? அவற்றுக்கான காரணங்கள் என்ன? யாருடைய நலன்களுக்காக அந்த நிலை ஏற்பட்டது? என்பது குறித்து எதுவும் பேசுவதில்லை.

ஊடகங்களில், சமூக ஊடகங்களில் மக்களுடைய கவலைகளை, துன்ப துயரங்களைபேசவேண்டும்.எழுதவேண்டும். காட்சி வடிவில் பகிர வேண்டும் என விரும்புகின்றனர். இவை அவசியமும் கூட. ஆனால், பொதுப் புத்தி மட்டத்திலேயே இவை இருப்பதுதான் பிரச்சனை.




எடுத்துக்காட்டாக, சென்னை பெருவெள்ளத்தில் தத்தளித்த பகுதிகள், அதில்சிக்கிக்கொண்ட மக்கள், அவர்களின் துயரங்கள் குறித்து ஊடகங்களில் பேசுகின்றனர். அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க அமைச்சர்களோ அதிகாரிகளோ வந்தார்களா என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். அரசும் அமைச்சர்களும் சரியாக கையாளவில்லை என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர்.

ஆனால், தொழில் முதலீடுகளும் தொழில் நிறுவனங்களும் சென்னை நகர் சார்ந்தே அதிகரித்து வருவது ஏன்? இதற்கும் சென்னை நகர விரிவாக்கத்திற்கும் உள்ள தொடர்புஎன்ன? நகர விரிவாக்கத்திற்கு பின்பற்றப்படும் கொள்கைகள், அதில் யாருடைய நலன்கள் முதன்மை பெறுகின்றன? நகர விரிவாக்கத்தின் போது கார்ப்பரேட் நிறுவனங்கள், அவற்றின் அலுவலகங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம், மக்களுக்கு தரப்படுகிறதா? ஏழை எளிய, நடுத்தர மக்களின் வாழ்விடங்கள், அதற்கான வசதிகள் திட்டமிடப்படுகிறதா? பெருவெள்ளம், பேரிடர் ஏற்படும்போது அவற்றை சமாளிப்பதற்கான அரசின் கொள்கைகள் என்ன? நிலம் பெரும் வணிகப் பண்டமாக மாற்றப்பட்டது ஏன்? என்பன போன்ற கேள்விகள் எழுப்பப்படவில்லையே. ஏன்?

ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் இவை போன்ற கேள்விகளை எழுப்புவதோ விவாதிப்பதோ கிடையாது. பொதுப் புத்தி மட்டத்திலேயே பிரச்சனைகளைப் பேசி, விவாதித்து முடிவடைந்து விடுகிறது.

சமூக ஊடகங்களில் பொதுப் புத்திக்கு மாறாக எழுதவும் பேசவும் சிலர் முற்படுகின்றனர். முகநூலில் சிலர் எழுதியும் பேசியும் வருகின்றனர். அவற்றுக்கு ஏற்படும் கதி குறித்து நாம் பேச வேண்டும்.

அமெரிக்க கார்ப்பரேட் நிறுவனமான மெட்டாவின் ஒரு அங்கம் தான் பேஸ்புக். நாம் முகநூல் என்கிறோம். இதில் அரசையும் அரசின் கொள்கைகளையும் விமர்சிக்கலாம். பொதுப் புத்திக்கு மாறாக பிரச்சனைகளை அணுகும் பதிவுகளைப் போடலாம். முகநூல் பயனர்களிடம் அவை வரவேற்பு பெறும் வரை மெட்டா நிர்வாகம் கண்டு கொள்ளாது. ஒன்றிய அரசின் கொள்கைகளை, அதன் செயல்பாடுகளை விமர்சித்து பதிவிட்ட பலருடைய முகநூல் பக்கங்களை யாருடைய பார்வையிலும் படாமல் செய்துவிட்டது மெட்டா.

“பெண்: அன்றும் இன்றும்” என்று ஒரு தொடரை நர்மதா தேவி என்பவர் தம்முடைய முகநூல் பக்கத்தில் எழுதி வந்தார். அந்தத் தொடரின் 33 வது பகுதி திடீரென நீக்கப்பட்டு விட்டது. அதற்கு சமூக ஊடக வழிகாட்டு விதிகளை (கம்யூனிட்டி கெய்ட் லைன்ஸ்) பின்பற்றவில்லை, போதுமான விவரங்கள் இல்லை என விளக்கம் தரப்பட்டுள்ளது. எப்படி இதை கண்டுபிடித்தார்கள்?

10 லட்சம் பேர் பார்த்துக் கொண்டிருந்த ‘ஜனசக்தி’ முகநூல் பக்கம், தற்போது சில லட்சம் பேர் பார்ப்பதாக சுருக்கப்பட்டு விட்டது. சமூக ஊடக வழிகாட்டு விதிகளை பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது. அப்படியானால், இந்த வழிகாட்டு விதிகள் என்ன சொல்கின்றன?

கார்ப்பரேட் நிறுவனங்களின் நலன்களுக்கும் அவற்றின் பாதம் தாங்கும் அரசுகளுக்கும் எதிராக பதிவிடாதீர்கள் என்பதுதான். மீறி பதிவிட்டால் அந்தப் பதிவுகள் நீக்கப்பட்டு விடும். அல்லது வெகு சிலருக்கு மட்டும் தெரியும் வகையில் குறுக்கப்பட்டு விடும்.

அதாவது, பொதுப் புத்திக்கு எதிராகவோ, பொதுப் புத்தியில் இருந்து மாறுபட்டோ வரக்கூடிய முகநூல் பதிவுகள் நீக்கப்படும் அல்லது பார்வையாளர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைக்கப்படும். சிறு குழுவுக்குள் அல்லது வெகு சிலருக்குள் பகிர்ந்து கொள்ளுங்கள் என்பதாக சுருக்கப்பட்டு விடும்.

இதிலிருந்து மீண்டுவர, நம்முடைய பதிவுகள் பலரை சென்றடைய வேண்டுமா? முகநூலில் விளம்பரம் கொடுங்கள். இதற்கு Facebook ads என்று பெயர். அப்பொழுது வழிகாட்டு விதிகள் சற்று விலகி நிற்கும். அதுவும் தொடர்ந்து விலகி நிற்காது.

அடுத்து, சமூக ஊடகங்களில் பரவும் போலிச் செய்திகள் (Fake News) முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. போலி செய்திகளை உருவாக்குவதையும் பரப்புவதையும் தொழில்நுட்ப வளர்ச்சி எளிதாக்கி உள்ளது. இந்த போலி செய்திகளை கட்டுப்படுத்த சட்டங்களை கடுமையாக்க வேண்டும் என அரசுகள் முயற்சிக்கின்றன. உண்மை சரிபார்ப்பு (Fact Check) அமைப்புகள், நிறுவனங்கள் தொடங்கப்பட்டு போலி செய்திகளைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போலி செய்திகளின் பெருக்கத்தால், முன் எப்போதையும் விட பலருக்கும் அரசியல் முட்டாள்தனமாகத் தெரிகிறது. ஆனால் இது புதிது இல்லை என்பது தான் வரலாறு.

ஊழலை ஒழித்து நேர்மையையும் சீர்திருத்தத்தையும் கொண்டு வரப்போவதாக பிரதமர் நரேந்திர மோடி கூறினார். 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கிறார். என்ன நடந்திருக்கிறது?

அதானி எப்படி மிகப் பெரும் கார்ப்பரேட்டாக மாறினார்? ரஃபேல் ஊழல் என்ன ஆனது? பாஜகவுக்கு பெரும் நிதி குவிந்தது எப்படி? மத்திய பிரதேச மாநிலத்தில் வியாபம் ஊழல் உட்பட மிக நீண்ட பட்டியல் வெளியானதே, அவை என்ன ஆனது? உத்தரப்பிரதேசத்தில் எந்த சட்டத்தின் அடிப்படையில் புல்டோசர் மூலம் வீடுகள் இடிக்கப்படுகின்றன? ‘பசு காவலர்கள்’ என்ற பெயரில் இஸ்லாமியர்கள் கொடூரமாக தாக்கப்பட்டனரே, அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? தலித்துகள், பழங்குடியினர் மீதான வன்முறை அதிகரித்தது ஏன்? பெரும் தொகுப்புகளாக வெளியிடும் அளவுக்கு பிரதமர் மோடியின் பொய்கள் உள்ளனவே,

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

# சாதி ஒழிப்பு சமூக நீதிப் போராட்டக் களத்தில் கம்யூனிஸ்டுகள்!



த.லெனின்

**அடிமை இந்தியாவில் ஓர் நம்பிக்கை உதயமாய் பிறப்பெடுத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் அமைப்பு நிலை மாநாட்டில் சிந்தனை சிற்பி சிங்காரவேலர். தனது தலைமை உரையில் இந்தியா மத பேதம் சாதி பேதம் பொருளாதார பேதம் என்ற மூன்று வகை பேதங்களால் பிரிந்து கிடக்கிறது. இந்திய கம்யூனிஸ்டுகளாகிய நாம் இந்த மூன்றையும் முற்றாக ஒழிப்பதற்கு போராட வேண்டும் என்று அழுத்தமாக குறிப்பிட்டார்.**

கம்யூனிஸ்டுகள் பொருளாதார சுரண்டல் மற்றும் சாதி வகைப்பட்ட இந்திய சமூக அமைப்பை நன்கு புரிந்து கொள்ள பல ஆய்வுகளை மேற்கொண்டனர். போராட்ட களத்தில் தெலுங்கானா போராட்டம், தெபாகா போராட்டம், வயலார், புன்னபுரா போராட்டம், சிரிகாகுளம் போராட்டம், கீழ தஞ்சையில் நடைபெற்ற விவசாய போராட்டங்கள் அனைத்தும் வீர காவியம் படைத்தவை ஆகும். இவை அனைத்தும் சாதி, தீண்டாமை எதிர்ப்பு போராட்டங்களாகவும், சுயமரியாதைக்கான போராட்டங்களாகவும் வரலாற்றில் அமைந்தது.


சமூக வாழ்நிலையே சமூக உணர்வை தீர்மானிக்கிறது (Social being determines Social Consciouness)" என்ற மார்க்சியக் கோட்பாட்டின் அடிப்படையில், அடித்தளம் உற்பத்தி உறவுகள்தான். உற்பத்தி உறவுகளோடு அடித்தளத்திலும், சிந்தனை என்பதால் வேல் கட்டுமானத்திலும் சாதி வினை ஆற்றுகிறது. எனவே இந்த சாதியை வேரறுக்க பல முனை தாக்குதல் தேவைப்படுகிறது என்று உணர்ந்து அதனை செயல்படுத்துவதுதான் கம்யூனிஸ்டுகளின் வேலை முறையாக இன்றும் உள்ளது.

நிலபிரபுத்துவ மற்றும் முதலாளித்துவ உற்பத்தி உறவை மாற்றுவதற்கான, அதற்கு மாற்றாக சோசலிச உற்பத்தி உறவை முன்னெடுப்பதோடு சாதியத்திற்கு எதிரான கருத்தியல் போராட்டத்தை, பண்பாட்டுப் போராட்டத்தை நடத்தவேண்டும்.

அறிஞர் ஆன்டர்சன் மற்றும் பார்க்கரின் கூற்றுபடி, "சாதி என்பது சமூக வர்க்க அமைப்பின் தீவிர வடிவமாகும், இதில் உள்ள படிநிலையில் தனிநபர்களின் நிலை வம்சாவளி மற்றும் பிறப்பால் தீர்மானிக்கப்படுகிறது. எனவே இதற்கு அடிப்படையான அனைத்தையும் அகற்றுவதற்கான ஒரு துல்லியமான போராட்ட முறையை இந்திய கம்யூனிஸ்டுகள் இன்று கை கொண்டு வருகிறார்கள்.

நவ காலனி ஆதிக்க ஏகாதிபத்திய சுரண்டல்முறைஇன்றுஒடுக்கப்பட்டவர்களை மேலும் ஒடுக்கி வருகிறது. பண்பாட்டு ரீதியாக ஒற்றை நுகர்வு கலாச்சாரம் ஊக்குவிக்கப்படுகிறது. இதன் மூலம் கார்ப்பரேட் லாப வெறிக்கு அரசுகளே பக்க பலமாக நின்று வருகின்றன. சமத்துவம், ஜனநாயக தன்மைகள் அனைத்தும் அழிக்கப்படுகின்றன. எனவே மக்களை கூறு போடும் ஒருலகக் கோட்பாட்டிற்கு எதிரான உள்ளூர் போராட்டத்தையும் உலகு தழுவிய போராட்டத்தையும் ஒருங்கே இணைத்து நடத்துவது தான் உலகில் ஜனநாயகத்தையும் சமத்துவத்தையும் நிலை நாட்டுவதற்கான ஒரே வழி. அந்த வழிமுறைகளில் சற்றும் பிறழாது பீடு நடை போடுகிறது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

வரலாற்று ரீதியாக வாய்ப்பு மறுக்கப்பட்ட சமூகங்களுக்கு வாய்ப்பை உருவாக்கத்தான் இட ஒதுக்கீடு என்ற சமூகநீதி கோட்பாடுஉருவாக்கப்பட்டது. இதுதான் இந்தியாவில்



நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த இட ஒதுக்கீட்டு முறை இந்தியாவை குறிப்பாக இந்து மதத்தை பிளவுபடுத்தும் முயற்சி என்றுதான் ஆர்.எஸ்.எஸ்.சும் சங்க பரிவார் அமைப்புகளும் தொடர்ந்து பேசி வருகின்றன அதிலும் அவர்களது குருவான கோல்வாக்கர் சாதிமுறை அறிவியல் பூர்வமானது என்று அடாவடித்தனமாக அதற்கு பெருமிதத்தை தருவதும் எதை காட்டுகிறது?

இந்த பின்னணியில்தான் இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 27 சதம் இட ஒதுக்கீடு மண்டல் குழுவின் பரிந்துரை அடிப்படையில் இந்தியாவில் அமல்படுத்தப்பட்ட போது அதற்கு எதிரான பல போராட்டங்களை நடத்தி தோல்வி கண்டவர்கள் தான் அவர்கள்.

அப்படிப்பட்டவர்கள் தான் இன்று இட ஒதுக்கீடு அவசியம் என்று பேசி வருகின்றனர். எப்போதுமே பாசிஸ்டுகள் இனிக்கும் முழக்கங்களை முன்வைத்து கசக்கும் பின் விளைவுகளை தருபவர்கள் தானே! அதனால்தான் இந்த கபட நாடகம்.

### இடஒதுக்கீட்டிற்கு ஆபத்து

இட ஒதுக்கீட்டிற்கு இப்போது பெரும் ஆபத்து வந்துள்ளது. தனியார் மயமாக்களும், உயர்சாதி ஏழைகளுக்கான 10% இட ஒதுக்கீடும் இன்று வேறு வழிகளில் இட ஒதுக்கீட்டு பிரிவினருக்கு பேராபத்தை தந்து வருகிறது

கடந்த 2006 ஆம் ஆண்டு 5.5 லட்சம் ஆக இருந்த வேலைவாய்ப்பு எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டு 7.5 லட்சமாக உயர்ந்து, ஒன்றிய அரசின் ஊழியர்கள் 2003இல் இருந்து 2012 வரை 32.69 லட்சமாக இருந்தது. ஒன்றிய அரசின் அனுமதிக்கப்பட்ட (sanctioned) வேலை வாய்ப்புகள் 42 லட்சம் ஆகும். ஆனால் மோடியின் ஆட்சியில் 26.30 லட்சமாக குறைந்துவிட்டது. இதில் 5.4 லட்சமாக இருந்த தலித்துகளின் வேலை வாய்ப்பு இடங்கள் 4.55 லட்சமாக அதாவது 16% குறைந்துவிட்டது.

மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் இருந்த வேலை இடங்களில் எண்ணிக்கை 2011இல் 18.1 லட்சம் ஆக இருந்தது. அது 2015ல 14.86 லட்சமாக குறைந்து விட்டது.

கடந்த 2008 ஆம் ஆண்டு பொதுத்துறை நிறுவனங்களில் இருந்த இதர பிற்படுத்தப்பட்டவர்களுக்கான எண்ணிக்கை 14.89 லட்சம். அது 2012ல் 23.55 லட்சமாக உயர்ந்தது. ஆனால் இன்று இந்த எண்ணிக்கையில் திடீர் சரிவை கண்டிருக்கிறது. இது ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே ஆகும். சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பதைப் போல இவர்களை பொறுத்த வரை சுட்டாலும் இட ஒதுக்கீடு தர மாட்டார்கள் என்பதை உண்மை.

எனவே சமூக நீதியில், சாதி ஒழிப்பில், இட ஒதுக்கீட்டில் என்றும் எதிர் நிலையை கொண்டிருக்கும் பச்சோந்தி தனமான பாரதிய ஜனதா – ஆர்.எஸ்.எஸ். ஒரு பக்கம் என்றால் மறுபுறத்தில் சாதி ஒழிப்பில் சமூக நீதியில் சம வாய்ப்பு பாரதி சொன்னதைப் போல கிருதயுகம் எழ பாடுபடும் கம்யூனிஸ்டுகள் போர்க்கால அணிவகுப்போடு இன்றும் களத்தில் நின்று போராடி வருகின்றனர்.

இந்தியச் சமூகத்தை ஒரு சமத்துவ சோசலிச சமூகமாக மாற்றி அமைக்கும் வரை இந்த போர் நிற்காது தொடரும். இதுவே இந்திய கம்யூனிஸ்டுகள் முன்னிருக்கும் ஒரே கொள்கை வழி! குறிக்கோள்! சமத்துவ – சமூக நீதி போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் என்றும் கம்பீரமாய் துணிந்து நிற்கிறார்கள் நிச்சயம் வெல்வார்கள்!

தொடர்புக்கு 9444481703

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

யாரை ஏமாற்ற? எந்த சட்டத்திற்கும் உட்படாமல், யாருக்கும் கணக்கு காட்டாமல் 'பிஎம் கேர்' என்ற பிரதமர் நலநிதியில் பணம் திரட்டுவது ஏன்?

பிரதமர் மோடியின் தேர்தல் பரப்புரையில் சொல்லப்படும் பொய்களை வாக்காளர்கள் உண்மையில் நம்புகிறார்களா? அல்லது தேர்தல்களில் வேறு ஏதேனும் நடந்துள்ளதா? நம்பகத் தன்மையற்ற செய்திகள், கருத்துக்கள் பொதுவெளியில் செல்வாக்கு செலுத்தும் என்ற எதார்த்தத்தை எப்படி எடுத்துக் கொள்வது?


இதற்கு மார்க்சியம் பதிலளிக்கிறது.

சமூகத்தின் பொருளாயத சக்தியாக இருக்கும் ஆளும் வர்க்கம், ஆளும் அறிவுத்துறை ஆற்றலாகவும் இருக்கிறது. உற்பத்தி கருவிகளை தன் வசம் வைத்திருக்கும் இந்த ஆளும் வர்க்கம், கருத்தியல் உற்பத்தி கருவிகள் மீதான கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கிறது.

ஆளும் வர்க்கம் அல்லது அதில் உள்ள சில குழுக்கள் பண்ட உற்பத்திக்கும் கருத்துகளைப் பரப்புவதற்கும் தேவையான கருவிகளை, வழிகளை உருவாக்கி வைத்துள்ளன. மற்ற வர்க்கங்களிடம் அவை இல்லை. இதனால் ஆளும் வர்க்கம் தமது கட்டுப்பாட்டை நிலை நிறுத்த, பராமரிக்க எந்தப் பொய்களையும் போலி செய்திகளையும் பரப்பும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

போலி செய்திகளை, பொய்யான கருத்துகளை எதிர்த்துப் போராட கருத்துகளின் தளத்தில் மட்டுமே பிரச்சனைகளை அணுகுவது போதாது என்கிறது மார்க்சியம்.

போலி செய்திகளை, பொய்யான கருத்துகளை சுட்டிக்காட்டுவதுடன், அவற்றை பரப்புவது யார்? எந்த நிறுவனம்? அதில் வெவ்வேறு வர்க்கங்களுக்கு இடையிலான உறவுகளின் வெளிப்பாடு மற்றும் சுரண்டல் நலன் குறித்து அம்பலப்படுத்த வேண்டும். முதலில் போலி செய்திகளை அனுமதிக்கும் வர்க்க உறவுகளை அம்பலப்படுத்திட வேண்டும்.




ஊடகங்களும் ஊடகத் தொழில்நுட்பங்களும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. இதற்கேற்ப ஆளும் வர்க்கம் கருத்தியல் மேலாண்மை செலுத்துவதும் மாறிஇருக்கிறது. எனவே கம்யூனிஸ்டுகளும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களையும் ஊடக வடிவங்களையும் தமதாக்கி கொள்ள வேண்டும். அவற்றின் மூலம் ஆளும் வர்க்கத்தையும், அதன் சுரண்டல் நலனையும், அவற்றைப் பாதுகாக்கும் பாஜக போன்ற பாசிஸ்ட் கட்சிகளையும் அம்பலப்படுத்த வேண்டும்.

கம்யூனிஸ்டுகள் புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்கி பொன்னுலகம் படைப்பார்கள். உழைக்கும்வர்க்கம் அனுபவங்களைக் கற்று அதிகாரத்தை கைப்பற்றும் என்பது உறுதி.

தொடர்புக்கு: 9500001224



என்.எஸ்.பெருமாள்

**ஒன்றுபட்ட இராமநாதபுரம் மாவட்ட நிலப்பரப்புக்கு ஒரு பெருமை உண்டு. ஆங்கிலேயர்களின் ஆதிக்க அதிகாரத்தை எதிர்ப்பதில் முன்னணியில் இருந்தவர்கள். அடிமை வாழ்வுக்கு இடம் தர மறுத்தும் நில பிரபுத்துவ மற்றும் ஜமீன்தார்களின் கொடுமைகளை எதிர்த்தும் தொடர்ந்து போராடி வந்தனர்.**

# சதி வழக்கில் இராமநாதபுரம் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி



இந்தப் போராட்டங்களின் வெப்பத்தை தாங்க முடியாமல் அக்னியூ என்ற ஆங்கிலேய ராணுவ அதிகாரி இராமநாதபுரம் மாவட்ட நிலப்பகுதிகளை கலவரநாடு (State of Revolt) எனப் பிரகடனப்படுத்தினார்.

சேதுபதி மன்னரின் விடுதலைக்காகவும், நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்திற்கு எதிராகவும் போராடிய விவசாயிகளை குற்றப்பரம்பரை என சட்டமியற்றி (Criminal Tribes Act) குறிப்பிட்ட சமூகத்தவரை அடக்கியாண்டது ஆங்கிலேயஅரசு.

இத்தனை அடக்குமுறைகளுக்கும் எதிராக களம்காண ஒரு போர்குணம் கொண்ட அமைப்பு அமைப்பு தேவைப்பட்டது. மிகச் சரியான தருணத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது.

1942 ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் மானாமதுரை நகரின் முதல் செயலாளராக எஸ்.முகம்மது அலியும், விருதுநகர் செயலாளராக எஸ்.உலகநாதனும், ராஜபாளையத்தில் எஸ்.கே.பங்காரு ராஜாவும், திருப்பத்தூரில் கே.சண்முகம், காரைக்குடியில் ராஜாராஜவர்மாவும், சிவகாசியில் எம்.மாரிமுத்துவும் நகர் செயலாளர்களாக பொதுமக்களிடம் வெளிப்படையாக அறிவித்து இயக்கப் பணிகளில் தீவிரம் காட்டத் தொடங்கினர்.

1942ல் செப்டம்பரில் மதுரை கட்சி அலுவலகத்தில் இராமநாதபுரம் மாவட்ட கட்சிஊழியர்களின் முன்னணித்தோழர்கள் கொண்ட கூட்டம் நடைபெறுகிறது. மாநிலத் தலைமையில் இருந்து பி.ராமமூர்த்தி, எம்.ஆர்.வெங்கட்ராமன், சர்மாஜி ஆகியோர் கலந்து கொண்டு வழிகாட்டினர். ராஜபாளையம் எஸ்.கே.பங்காரு, சிவகாசி மாரிமுத்து, விருதுநகர் உலகநாதன், திருப்பத்தூர் கே.சண்முகம், தொண்டர் மாணிக்கம், மானாமதுரை எம்.வி.சுந்தரம், எஸ்.முகம்மது அலி, கமுதி இராமச்சந்திரன் ஆகிய எட்டு பேர்கள் கொண்ட இந்த முதல் கூட்டத்தில்தான் இராமநாதபுரம் மாவட்ட கட்சி அமைப்பு உருவக்கப்படுகிறது.

இதன் அமைப்பாளராக எம்.வி.சுந்தரம் செயல்பட வேண்டும் என முடிவு செய்யப்படுகிறது.

எம். வி. சுந்தரம் தன்னுடைய வாழ்நாட்களில் எட்டு வருடங்களுக்கு மேல் கொடுஞ் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தார்.

1942ல் கட்சி அமைப்பு உருவாக்கப்பட்டு 1946 மற்றும் 1947ல் விருதுநகர், அருப்புக்கோட்டை, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சிவகங்கை, காரைக்குடி, தேவகோட்டை, இராமநாதபுரம், பரமக்குடி ஆகிய 10 மையங்களில் கம்யூனிஸ்ட் கட்சி வீரியத்துடன் வளர்ச்சி பெற்றது. ஒவ்வொரு தாலுகாவிலும் விவசாய சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. 2,800 கட்சி உறுப்பினர்களுடன், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய சங்க உறுப்பினர்களைக் கொண்ட அமைப்பாக கட்சி உருவானது.

கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்ட முதல் மாநாடு விருதுநகரில் 1947 டிசம்பரில் நடைபெற்றது. என்.கே. கிருஷ்ணன், பி.சீனிவாச ராவ், எம்.ஆர். வெங்கட்ராமன், பாலதண்டாயுதம் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர். முதல் மாவட்ட செயலாளராக எம் வி சுந்தரம் தேர்வு செய்யப்படுகிறார்.

கல்கத்தாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாடு 1948 பிப்ரவரி 28 தொடங்கி மார்ச் 6 வரையில் நடைபெற்றது.

மாநாட்டில், மாவட்டத்தின் முதல் செயலாளர் எம்.வி.சுந்தரம் மற்றும் எஸ். உலகநாதன், எஸ்.அழகிரிசாமி, பி.என்.பி.கபூர், எம்.ஆதிமூலம், எஸ்.ஆர். அழகப்பன் ஆகிய 6 பேர் பிரதிநிதிகளாக கல்கத்தாவிற்குச் சென்றனர்.

தேசிய மாநாட்டின் முடிவுகள் அன்றைய நேரு தலைமையிலான அரசுக்கு எதிராக இருந்தது. அதனால் மாநாடு முடிந்த உடனேயே வங்காளத்தில் பொது பாதுகாப்புச் சட்டம் (Public Safety Act) அமுல்படுத்தப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியும், தொழிற்சங்கமும் தடைசெய்யப்பட்டன. 1948 செப்டம்பரில் ஹைதராபாத் சமஸ்தானத்திலும், சென்னை மாகாணத்திலும், 1950ல் திருவாங்கூர், கொச்சின் சமஸ்தானத்திலும் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்படுகிறது.

பிரிட்டன் ஆட்சியில் பெஷாவர், கான்பூர், மீரட், லாகூர் சதி வழக்குகளை கம்யூனிஸ்ட் கட்சி எதிர் கொண்டது. இப்போது சுதந்திர இந்தியாவிலும் சதி வழக்குகள் புனையப்பட்டன. இராமநாதபுரம் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது போடப்பட்ட சதி வழக்கு, அதேபோல நெல்லை, திருச்சி, சேலம் மாவட்டங்களிலும் சதி வழக்குகள் புனையப்பட்டன. மதுரை மாவட்டத்தில் கொள்ளை, கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

1950 ஜனவரி 26ல் இந்தியா ஜனநாயக குடியரசாக மலர்கிறது. அதே சூழலில் இந்தியாவின் கடைக்கோடி மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்தில், ஜமீன்தார், இனாம்தார் மற்றும் ஆதிக்க சக்திகளாக இருக்கும் மிகப்பெரும் நிலக்கிழார்களுக்கு எதிராகப் போராடி வரும் கம்யூனிஸ்ட்டுகள் மீது சதிவழக்கு போடப்படுகிறது.

இந்திய அரசையும் சென்னை மாகாண அரசாங்கத்தையும் அல்லது கிரிமினல் பலத்தைக் காட்டி தூக்கி எறிவதற்கு குற்றவாளிகள் ஒன்று சேர்ந்து சதி செய்தார்கள். நிலப்பிரபுத்துவ சட்டப்படி செலுத்த வேண்டிய வரிகளை, விவசாயிகளை செலுத்தவிடாமல் விவசாயிகளுக்கு ஆதரவாக கம்யூனிஸ்டுகள் துணை நின்றார்கள்.

குளங்களில் இறங்கி மீன்களை பிடித்துக் கொள்ளலாம் என பொதுமக்களை தூண்டினார்கள். மிராசுதார்களுக்கு வாரம் வரி கொடுக்கக் கூடாது என்றும் ஊர் பொதுக் குளத்தில் மீன் பிடிக்குமாறும் விவசாயிகளையும் பொதுமக்களையும் தூண்டுவது தேச துரோக செயலாகும். இபிகோ 121எ, 120பி ஆகிய சட்டப்பிரிவின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். என நீள்கிறது சதி வழக்கின் சாரம்.

உழுபவனுக்கு நிலம் சொந்தம். ஊருக்கு பொதுவானது குளம் என்ற அடிப்படை உரிமைக் குரலை விவசாயிகள் மத்தியில் 1942 ஆம் ஆண்டு முதல் வளர்த்து வந்த பெருமை கம்யூனிஸ்ட் கட்சிக்கு தான் உண்டு.

இந்தசதிவழக்கின் தொடக்கமேவத்திராயிருப்பு மற்றும் கீழப்பசளை பகுதிகளில் நடைபெற்ற போராட்டம்தான் காரணம் என நீதிமன்ற விசாரணையில் வெளியானது. கம்யூனிஸ்ட் கட்சி தடைக்குப் பிறகு வழக்கு போட வேண்டும் என்பதற்காகவே பழைய போராட்ட இயக்கங்களை கையிலெடுத்து காவல்துறை சதி வழக்கு பதிவு செய்தது.

1946 ஜனவரி 26ல் வத்திராயிருப்பு பிர்காவில் சுத்தவாரப் போராட்டம் துவக்குவது என்று மேலப்பாளையத்தில் எஸ்.சீனிவாசத்தேவர் தலைமையிலான விவசாயிகள் சங்கம் முடிவு செய்கிறது.

தொடர் விவசாய போராட்டங்களின் விளைவாக 1946 பிப்ரவரியில் அறுவடை காலத்தில் வத்திராயிருப்பு பிர்காவில் மாவட்ட ஆட்சியரும் காவல்துறை அதிகாரிகளும் நேரில் வந்து மகசூலில் ஐந்தில் இரண்டு வாரம் விவசாயிகளுக்கு கொடுப்பது என்றும் களத்தில் பல பிடித்தங்கள் செய்யும் மிராசுதார்களின் பண்டைய கால பழக்கவழக்கம் நிறுத்தப்படும் என்கிற வகையில் ஆட்சியர் முடிவு செய்கிறார்.

ஆனால் இதனை ஏற்க மறுத்த மிராசுதார்கள் மறு வருடம் நிலங்களை உழவு செய்ய விடாமல் தரிசாகப் போட்டனர். உதாரணமாக சிவனேரி கண்மாய் சாகுபடி நிலத்தில் 180 ஏக்கர் நிலத்தை உழவு செய்ய விடாமல் மிராசுதார்கள் தரிசாகப் போட்டனர். 40 ஏக்கர் கோடை கால கேப்பை சாகுபடிக்கும் நிலங்களை உழவு செய்ய விடாமல் விவசாயிகளை தடுத்தனர். விவசாய நிலத்தில் குப்பைகளை கொட்டும் கொடுமைகளும் மிராசுதார்கள் செய்தனர்.

அடுத்த ஆண்டு உழவு காலத்தில் நிலங்களை தரிசாக போட விடமாட்டோம் என்று விவசாய ஆண்களும் பெண்களும் திரண்டனர். நிலங்களில் குப்பை கொட்டியதை அப்புறப்படுத்தி உழுது சாகுபடி செய்தனர். கூட்டாகவே அறுவடை செய்து மகசூலை விவசாயிகள் பிரித்துக் கொண்டனர்.

வத்திராயிருப்பு பிர்காவில் ஆறு கண்மாய்களில் அரசாங்கத்தால் விதிக்கப்படும் தண்ட வரியை கட்டி வரும் விவசாயிகளுக்கு குளங்கள் சொந்தமா? மிராசுதார்களுக்கு சொந்தமா?

பிளவக்கள் அணைக்கட்டு வேண்டும் என்பது விவசாயிகளுக்காகவா அல்லது ஒரு சில மிராசுதாரர்களுக்காகவா? அரசாங்கம் உருவாக்கும் நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள், குளங்கள், கண்மாய்கள், ஏரிகள் விவசாயிகளுக்கு தான் உரிமை. நிலப்பிரபுகளுக்கும், மிராசுதார்களுக்கும் மிட்டாதாரர்க்கும் அல்ல! இதுவே விவசாயிகளின் வாதமாக இருந்தது.

கம்யூனிஸ்டுகள் இதையே நியாயம் என்று கருதி விவசாயிகளை ஆதரித்தார்கள். போலீசாரும்நீதித்துறையும் நிலப்பபிரபுகளுக்கு சொந்தம். அதுதான் நீதி எனக் கூறுகிறார்கள். 'பிரிட்டிசார் இந்தியாவை அடிமைப் படுத்தியதால் அவர்களுக்கு தாய்நாடு இந்தியா ஆகாது. இந்தியா அடிமைப்பட்ட போதிலும் இந்தியருக்கே சொந்தம். அதுபோன்று நிலங்கள் பறிக்கப்பட்டு இருந்தபோதிலும், நிலங்கள் உழுபவனுக்கே சொந்தம்!". மகாத்மா காந்தி கூறியதும் போராடியதும் இதற்காகத்தான்.

இதனால்சுதந்திரஇந்தியாவில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழப்பசலை, வத்திராயிருப்பு மற்றும் பல கிராமங்களிலும் நில உரிமைக்காக விவசாயிகள் போராடி வந்ததை கம்யூனிஸ்டுகள் உறுதியுடன் ஆதரித்து வந்தனர்.

இதனையே ராமநாதபுரம் மாவட்டசதிவழக்கில்அணைவரும் ஒருமித்த குரலில் ஒரே கருத்தில் தங்களுடைய வாக்குமூலத்தில் விவசாயிகள் போராட்டங்கள் நியாயமானதே என்று கூறினார்கள் என்பதும் சதி வழக்கின் தீர்ப்பில் வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

வத்திராயிருப்பு காவல் நிலையத்தை விவசாயிகளையும் மக்களையும் ஒன்று திரட்டி பயங்கர ஆயுதங்களுடன் மொத்தம் 39 பேர்கள் வந்து தாக்கினார்கள். இந்தத் தாக்குதல் போராட்டத்தில் ஜில்லா போர்டு தேர்தலில் கம்யூனிஸ்ட் வேட்பாளராக நிறுத்தப்பட்டு இருந்த சிவனாண்டி பண்டாரம் தலைமை தாங்கினார் என்பது போலீசாரின் குற்றச்சாட்டு. அதன் மீது செஷன்ஸ் கோர்ட் விசாரணையில் நீதிபதி போலீசாருக்கு முற்றிலும் ஆதரவாக நடந்து கொண்ட போதிலும் 25 பேர்கள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்ப்பளிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மிஞ்சிய 14 பேர்கள் தான் குற்றவாளிகள் என்று நீதிபதியின் தீர்ப்பு கூறியது. ஆனால் இந்த தீர்ப்பை பெறுவதற்கு 1950 முதல் 1952 ஜூன் முடிய 30 மாதங்கள், 39 பேர்களும் சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்தது என்றால் எந்த அளவுக்கு கம்யூனிஸ்ட்கள் மீது அன்றைய அதிகார வர்க்கம் அத்துமீறல் செய்திருக்கிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் மட்டுமே.!

இராமநாதபுரம் சதிவழக்கில் முதல் குற்றவாளியாக எம்.வி.சுந்தரம், எம்.கிருஷ்ணன், திருப்பத்தூர் கே.சண்முகம், கூத்தக்குடி சண்முகம், சிவனாண்டி பண்டாரம், குப்பையாண்டி தேவர், நடராஜன் செட்டியார் உள்ளிட்ட 59 பேர் மீது வழக்கு பதிவு செய்யப் படுகிறது.

வழக்கின் தீர்ப்பில் எம்.வி.சுந்தரம், திருப்பத்தூர் சண்முகம், சிவனாண்டி பண்டாரம், வெங்கடசாமி, பி.ராமச்சந்திரன், லிங்கசாமி, திருவேங்கடத்தேவர், அழகப்பராஜா, கே.கே.பெருமாள்,

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

# உரிமை காக்க திரண்டு எழுவோம்...



அ.பாஸ்கர்

**உடல் உழைப்பை மட்டுமே வாழ்வாதாரமாக பெற்றுள்ள விவசாயத் தொழிலாளர்களில் சரி பாதிக்கும் அதிகமானோர் "பட்டியல் சாதியினர் "என வகைபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் உழைப்பு சுரண்டலுக்கு மட்டுமல்ல, சமூக ஒடுக்கு முறைக்கும் சேர்ந்து இரட்டை சுரண்டலுக்கு ஆளாகி வருகின்றனர்.**

மூன்று ஐந்தாண்டு திட்டங்களை நாடு செயல்படுத்திய நடைமுறை அனுபவத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை பெறும் உரிமைக்கு சட்டபூர்வ உத்திரவாதம் வேண்டும் என இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் 1968 ஆம் ஆண்டில் கோரிக்கை வைத்தது.

இதன் தொடர்ச்சியாக வீட்டு மனை நிலமும், வீடு கட்ட பணமும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

கோரிக்கைகளை முன்னெடுத்து நிறைவேற்ற வலியுறுத்தி மாநில அளவிலும், நாடுதழுவிய முறையிலும் போராட்டங்கள் தொடர்ந்து நடைப்பெற்று வந்தன

நாடாளுமன்றத்திலும், சட்டப்பேரவைகளிலும் விவசாயத் தொழிலாளர் கோரிக்கை எதிரொலித்தன.

இதன் விளைவாக 1980 ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்து ஊரக வளர்ச்சி திட்டம், தேசிய கிராமப்புற வேலை உறுதியளிப்புத் திட்டம், தொகுப்பு வீடு கட்டித் தரும் திட்டம், வேலைக்கு உணவு திட்டம் என வறுமை ஒழிப்பு திட்டங்களாக அறிவிக்கப்பட்டன.

ஒன்றிய, மாநில அரசுகளின் திட்டங்கள் வறுமை ஒழிப்பில் தோல்வி அடைந்தன. வேலையின்மை வளர்ந்து பெருக வழி வகுத்தன.

இந்தச் சூழலில் வேலை பெறும் உரிமைக்கான போராட்டங்கள் வலிமை பெற்று அரசியல் களத்தில் தாக்கம் ஏற்படுத்தியது

நாட்டின் அரசியல் நிகழ்வுப் போக்கில், நீண்ட இடைவெளிக்குப் பிறகு இடதுசாரி கட்சிகள் தலையீடு செய்யும் வலிமை பெற்றன. 2004 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் இடதுசாரி கட்சிகளின் 61 உறுப்பினர்கள் மக்களவைக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

வகுப்புவாத, மதவெறி சக்திகள் ஆட்சியில் தொடர்வதை அனுமதிக்க முடியாது என்பதில் ஒத்த கருத்துள்ள கட்சிகள் ஒருங்கிணைந்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அமைத்தன. இந்தக் கூட்டணியில் இடதுசாரி கட்சிகள் முக்கியத்துவம் பெற்றன. இடதுசாரி கட்சிகள் ஆட்சியில் பங்கேற்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ஆனால் இடதுசாரி கட்சிகள் ஆட்சிக்கு ஆதரவளித்து அரசுக்கு குறைந்தபட்ச பொது வேலைத் திட்டம் வேண்டும் என கேட்டுக் கொண்டன. இதன்படி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு குறைந்த பட்ச பொது வேலைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டது. ஆட்சிக்கு ஆலோசனை வழங்க திருமதி சோனியா காந்தி தலைமையில், இடது சாரி கட்சிகள் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் குழுவில் இடதுசாரிகள் வலியுறுத்தியதைத் தொடர்ந்து 2005ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

ஊரகப் பகுதியில் வாழ்ந்து வரும் உடல் உழைப்புத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை பெறும் உரிமை சட்டபூர்வமாக அளிக்கப்பட்டது

வரலாற்று சிறப்பு மிக்க வேலை உறுதியளிப்புச் சட்டத்தின் படி, வேலைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு முதல் கட்டமாக 200 மாவட்டங்களில் 2006 பிப்ரவரி 2 ஆம் நாள் முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டம் செயலுக்கு வந்தது

இத்திட்டம் மூலம் நாடு முழுவதும் 15 கோடியே 50 லட்சம் குடும்பங்கள் வேலை அட்டை பெற்றுள்ளன. இதன் மூலம் இந்தக் குடும்பங்களை சேர்ந்த சுமார் 25 கோடி தொழிலாளர்கள் ஆண்டுக்கு 100 நாள் வேலை பெறும் சட்டபூர்வ உரிமை பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் பெருநகர சென்னை மாவட்டம் நீங்கலாக உள்ள 37 மாவட்டங்களில், 388 ஒன்றியங்கள் 12 ஆயிரத்து 525 சிற்றூராட்சிகளில் வாழ்ந்துவரும் ஒரு கோடியே 36 லட்சம் தொழிலாளர்கள் வேலை பெறும் உரிமை பெற்றுள்ளனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களுக்கு தமது வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் திட்டமாக அமைந்துள்ளது

உலக அளவில் முன்னோடித் திட்டமாக கருதப்படுகிற வேலை உறுதியளிப்புச் சட்டம் மற்றும் திட்டப் பணிகள் தேசிய முக்கியத்துவம் பெற்று விளங்கி வருகின்றது

இந்தத் திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் மத சாதி, மொழி, வட்டாரப் பாகுபாடுகள் ஏதும் இல்லாமல் ஒற்றுமையாக பணிபுரியும் நிலை வாய்த்துள்ளது இதன் காரணமாக சமூக நல்லிணக்கம் உறுதிப்பட்டு வருகிறது.

ஆனால், இத்திட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் குறைந்த பட்ச ஊதியம் நாடு முழுவதும் ஒரே சீராகவோ அல்லது சமமாகவோ இல்லை என்பதே வேதனையாகும்.

மாநிலத்திற்கு, மாநிலம் வேறுபாடும், ஏற்ற தாழ்வுகளும் நிலவி வரும் குறைந்த பட்ச ஊதியத்தை நாடு முழுவதும் ரூ 700 என நிர்ணயித்து வழங்க வேண்டும் என இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் 15 வது தேசிய மாநாடு கோரிக்கை வைத்துள்ளது

விவசாய வேலைகள் நவீன முறைக்கு மாறியுள்ளன. எந்திரமயமாகி வருவதுடன், உடல் உழைப்புக்காக வேலை வாய்ப்பு குறைந்து வருகின்றது இந்த நிலையில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில்,



குடும்பத்திற்கு ஆண்டுக்கு 100 நாள் வேலை என்பதை திருத்தி, உடல் உழைப்புத் தொழிலாளர் ஒவ்வொருவரும் ஆண்டுக்கு 200 நாள் வேலை பெறும் உரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் 15. வது தேசிய மாநாடு முன் வைத்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் செயல்படுத்தி வரும் நூறுநாள் வேலை திட்டம் நமது நாட்டின் பொதுச் சொத்துக்களை உருவாக்கி இருப்பதுடன், பட்டியலின மக்கள், பழங்குடி மக்களின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்து வருகிறது

அண்மையில் கேரளா மாநிலத்தில் உள்ள இடதுசாரி ஜனநாயக முன்னணி அரசு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் பழங்குடி மக்களுக்கு ஆண்டுக்கு 200 நாள் வேலை வழங்கப்படும் என அறிவித்துள்ளது பழங்குடி மக்களின் சமூக, பொருளாதார வாழ்விற்கு முன்னுரிமை தந்து, வழிகாட்டும் மாநிலமாக கேரளம் திகழ்கிறது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகளின் செயலாக்கத்தை கண்காணிக்க, மேற்பார்வை செய்ய, சரி பார்க்க, வேலை உறுதியளிப்புச் சட்டம் பிரிவு 17 மூலம் கிராமசபைகளுக்கு அதிகாரம் வழங்கியுள்ளது இது தவிர அதிகாரிகள், சமூக செயல்பாட்டு அமைப்புகள், தொழிற் சங்கங்கள் சேர்ந்து நடத்தும் சமூக தணிக்கை குழுக்கள் செயல்பட்டு வருகின்றன

மத்திய கணக்கு மற்றும் தணிக்கைக் குழுவின் தரத்துடன் சமூக தணிக்கை தர நிலைகள் அமைந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு சமூக தணிக்கை குழுவும் முந்தைய ஆண்டில் மாநிலத்தில் செய்யப்பட்ட வேலை உறுதியளிப்புத் திட்டச் செலவினத்தில். 0.5% க்கு சமமான நிதியை பெற உரிமை உண்டு.

இந்த சமூக தணிக்கை அறிக்கை ஒன்றிய அரசு ஒதுக்கும் நிதிப் பயன்பாடு குறித்து பரிசீலிப்பது, வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் உருவான உள்கட்டமைப்புகளின் தரத்தை பரிசோதிப்பது மற்றும் ஊதியம் வழங்கப்பட்ட முறையில் ஏற்படும் நிதி முறைகேடுகளை வெளிப்படுத்துவது போன்ற முக்கியத்துவம் கொண்டதாகும்.

ஒன்றிய அரசு சமூக தணிக்கை நடத்தாத மாநிலங்களுக்கு நிதியை நிறுத்தி வைக்கப்படும் என அறிவித்துள்ளது.

ஆனால், ஒன்றிய அரசு சமூகத் தணிக்கை பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்காத காரணத்தால் சமூக தணிக்கை தாமதமாக நடைபெறுகிறது என்பது மாநில அரசுகள் கூறும் பதிலாக அமைந்துள்ளன .

நாட்டில் உள்ள 28 மாநிலங்கள் மற்றும் 8 யூனியன் பிரதேசங்களில் கேரளா மாநிலத்தில் மட்டும் தான் நூறு சதவீதம் சமூக தணிக்கை முடிந்துள்ளது.

பீகார் 64.4 சதவீகிதம் குஜராத் 58.8 சதவீகிதம் ஜம்மு காஷ்மீர் 64.1 சதவீகிதம் ஒடிசா 60.42 சதவீகிதம் உத்திரபிரதேசம் 54.97 சதவீகிதம் என்ற அளவில் சமூக தணிக்கை முடிந்துள்ளன

நாடு முழுவதும் எந்த கட்சி ஆட்சியில் இருந்தாலும் உடல் உழைப்புத் தொழிலாளர் வாழ்க்கை நிலை ஒரே மாதிரியாக இருக்கிறது.

இது தவிர நூறுநாள் திட்டப் பணியில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு மூன்று மாதம் வரை ஊதியம் வழங்காத அவல நிலையும் தொடர்கிறது .

கடந்த பத்தாண்டுகளாக நரேந்திர மோடியின் பாஜக ஒன்றிய அரசு, வேலை உறுதியளிப்புச் சட்டத்தை அழித்து விட வேண்டும் என்ற சிந்தனையோடு செயல்பட்டு வருகிறது.

உலக நாடுகள் பாராட்டி வரும் முன்னோடி திட்டம் என்பதால் அதன் உருவத்தை வைத்துக் கொண்டு, உள்ளடக்கத்தை சிதைத்து வருகிறது. ஆம்! மோடியின் ஒன்றிய அரசு " உடலில் உயிரை எடுக்காமல் உறுப்புகளை வெட்டுவது போல வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து வருகிறது

கணக்கு தீர்க்க காலம் கனிந்து வருகிறது நாம் வாழ்வாதாரம் காக்க ஒன்றுபட்டு போராடுவோம். வரும் 2024 ஆம் ஆண்டில் நமக்கான அரசை அமைப்போம்.

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆசிர்வாதம், ராமசாமி, பேராசிரியர் ஏ. சங்கரநாராயணன் ஆகிய 13 பேர்கள் கூடிக் கலந்து சதி செய்தவர்கள் என்று தீர்ப்பில் சொல்லப்படுகிறது.

அதன்படி எம்.வி.சுந்தரம், திருப்பத்தூர் சண்முகம், பேராசிரியர் ஏ.சங்கரநாராயணன், பி ராமச்சந்திரன் ஆகிய நால்வருக்கு எட்டு வருட சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. இருந்தாலும் நீதிபதி மனமிரங்கி ஐந்தாண்டுகள் அனுபவித்தால் போதும் என்று தீர்ப்பில் குறிப்பிடுகிறார். மீதம் ஒன்பது பேர்களுக்கு இரண்டு வருட கடுங்காவல் தண்டனை கிடைக்கிறது. மற்ற 10 பேர்கள் ஒரு வருட தண்டனை பெறுகிறார்கள். கூத்தக்குடி சண்முகம் உள்ளிட்ட 36 பேர்களும் விடுதலை பெற்றனர்.

இராமநாதபுரம் மாவட்ட செஷன்ஸ் கோர்ட் அளித்த இந்த தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்யப்படுகிறது. இதில் கம்யூனிஸ்டுகளின் சார்பில் வழக்கறிஞர் மோகன் குமாரமங்கலம் ஆஜராகி வாதிடுகிறார்.

நீதிபதிகள் மாக், சோமசுந்தரம், ஆகிய இருவர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு 1954 மார்ச் 2ல் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இந்த வழக்கில் தண்டனை பெற்றுள்ள பேராசிரியர் சங்கரநாராயணன் விடுதலை பெறுகிறார். மீதம் உள்ள 12 பேர்களில் கிரிமினல் சதி செய்த 9 பேர்கள் குற்றவாளிகள் என்று உயர்நீதிமன்றம் அறிவிக்கிறது.

மேலும் செஷன்ஸ் கோர்ட் வழங்கிய ஐந்து வருட தண்டனையை மூன்று வருட காலமாகவும், 3 வருட கால தண்டனையை 18 மாத காலமாகவும் குறைக்கப்பட்டது. மூன்று வருட கால தண்டனை பெற்ற எம்.வி. சுந்தரம், திருப்பத்தூர் சண்முகம், எம்.கிருஷ்ணன், பி.இராமச்சந்திரன் தவிர மற்றவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர்.

எம்.வி.சுந்தரம் உள்ளிட்ட நால்வரும் விசாரணை கைதிகளாக 5 வருட சிறைக்காலமும் உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி 3 வருட சிறை தண்டனையும் ஆக மொத்தம் எட்டு வருட சிறைத் தண்டனை அனுபவித்து 1956 ஆம் ஆண்டு விடுதலை பெறுகின்றனர்.

இந்திய அரசியல் சட்டமும் இந்திய ஜனநாயக குடியரசும் ஏற்பட்ட பின்னரும் இந்திய அரசை கவிழ்த்திடும் சதிகாரர்கள் என்று தண்டனை பெற்று சிறைக் கொடுமைகளை அனுபவித்த தியாகங்களுக்கு நிகராக எந்த அரசியல் இயக்கமும் இந்தியாவில் இல்லை.

இன்று... உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் எனும் வகையில் நில உச்சவரம்பு சட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடும் அளவுக்கு விவசாயம் மேன்மை பெற்றுள்ளது. அதற்காக தன் நலம் கருதாமல் தியாகம் செய்தவர்கள் கம்யூனிஸ்டுகள்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பங்கேற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விவசாயிகளுக்கான பயிர் காப்பீட்டுத் திட்டம், நூறு நாள் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் என இந்தச் சாதனைகளுக்கு அடிக்கற்களாக நின்றவர்கள் கம்யூனிஸ்டுகள் என்பதுதான் உண்மையான வரலாறாகும்.

## காலநிலை மாற்றத்திற்கான ஐ.நா. மாநாட்டுத் தீர்மானங்கள்

# பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்



அருண் நெடுஞ்செழியன்

**அண்மையில் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் பெய்துள்ள அதிகனமழையும், அதனால் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்பும் நம்மை கதிகலங்கச் செய்கின்றன. சென்னையை புரட்டிப் போட்ட மிக்ஜாம் புயல் வெள்ள பாதிப்பு மறைவதற்குள் தென்மாவட்டங்களை புரட்டிப்போட்டுள்ள மழை வெள்ளம் கவலைக்குரியதாக உள்ளது.**


தற்போது பொழிந்து வரும் வடகிழக்கு பருவமழை, இயல்பாக பெய்வதைக் காட்டிலும் குறிப்பிட்ட இடத்தில் மிக அதிகமாகப் பொழிந்து,வருவதை நாம் கவனிக்க வேண்டும். காயல்பட்டினத்தில் 24 மணி நேரத்தில் மட்டும் 95 செ.மீ அதி கனமழை பெய்துள்ளது. அதாவது அப்பகுதியில் ஒரு ஆண்டில் பெய்யும் மழை அளவானது, ஒரே நாளில் பெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் தற்போது பெய்த அதி கனமழைகுறித்து கருத்து கூறியுள்ள இந்திய வானிலை ஆய்வு மைய தென் மண்டல இயக்குநர் எஸ்.பாலச்சந்திரன் அவர்கள் "புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம் காரணமாக இது போன்ற நிகழ்வுகள் ஏற்படலாம். வருங்காலங்களிலும், இது போன்ற மழை பொழிவுகள் இருக்கும். வட கிழக்கு பருவமழையின் போது, அதி கனமழை நிகழ்வுகள் அதிகம் இருக்கும் என வெளியாகியுள்ள பல ஆய்வுக் கட்டுரைகள் தெரிவிக்கின்றன. எனவே இனிமேல் எதிர்பார்க்காததை எதிர்பார்க்க வேண்டும்" என்கிறார்.

இந்நிலையில், காலநிலை மாற்ற சிக்கல் குறித்து உலக நாடுகள் மத்தியில் நடைபெறுகிற விவாதங்கள் பற்றியெல்லாம் இனியும் நாம் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. ஐநாவின் காலநிலை மாநாடுகளில் எடுக்கப்படும் முடிவுகள், தீர்மானங்கள் தமிழ்நாடு வரை, நம்மூர் வரை விளைவை ஏற்படுத்தும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவ்வகையில் துபாயில் நடைபெற்ற காலநிலை மாநாடு குறித்து சென்ற வார கட்டுரையில் பார்த்தோம். தற்போது அம்மாநாடு நடந்து முடிந்துவிட்ட நிலையில், அங்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் குறித்து சுருக்கமாக பார்ப்போம்.

ஐநாவின் காலநிலை மாற்றதிற்கான சிளிறி28 (சிளிறி கான்ஃப்ரன்ஸ் ஆஃப் த பார்ட்டீஸ் (Conference of the Parties)) உச்சி மாநாடு துபாயில் நடைபெற்று முடிந்துள்ளது. இம்மாநாட்டில் கலந்து கொண்ட பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள், காலநிலை மாற்ற சிக்கலை எதிர்கொள்வது தொடர்பாக ஏற்கனவே ஒப்புக்கொண்ட முடிவுகள் குறித்தும் காலநிலை மாற்றத்தால் உலகெங்கிலும் ஏற்பட்டு வரும் பாதிப்புகள், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திட்டங்களுக்கான நிதி ஆதாரம் குறித்தும் இம்மாநாட்டில் விவாதித்தனர்.

முன்னதாக நிலக்கரி, எண்ணெய் எரிவாயு போன்ற புதைபடிவ எரிபொருள்களில், நிலக்கரியை மட்டும் மின் உற்பத்தி மற்றும் தொழிற்சாலை போன்ற பயன்பாடுகளில் இருந்து "அகற்றுவது" என 2016 ஆம் ஆண்டு கிளாஸ்கோவில் நடைபெற்ற காலநிலை மாநாட்டில் ஒரு முடிவு எட்டப்பட்டது. தற்போது நடந்து முடிந்த மாநாட்டில் இம்முடிவு குறித்து விவாதம் நடைபெற்று இறுதியில் நிலக்கரி பயன்பாட்டை அகற்றுவது என்ற வாசகம் நீக்கப்பட்டு "மட்டுப்படுத்திக் குறைப்பது" என மாற்றப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தை ஏற்பதாக 192 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.







இந்த தீர்மானம் பெரும் சாதனை என்றும் பெரும் ஓட்டை மிகுந்தவை என்றும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. அதாவது, நிலக்கரி பயன்பாட்டை கொஞ்சம் கொஞ்சமாக மட்டுப்படுத்திக் கொள்வதற்கு உலக நாடுகள் அனைத்தும் ஒருமித்த வகையில் ஒப்புக்கொண்டது சாதனை என்றும், வெப்பநிலையை 1.5 டிகிரிக்கு மிகாமல் வைக்க வேண்டும் என்றால், 2025 ஆம் ஆண்டுக்குள்கரிவாயுவெளியேற்ற அளவை குறைப்பதாக ஏற்கனவே ஒப்புக்கொண்ட தீர்மானங்கள் பொருளற்றதாகிவிடுவது வேதனை எனவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

காலநிலை மாற்ற சிக்கலுக்கு காரணமாக இருக்கின்ற பசுமைக் குடில் வாயுக்களில் 75 விழுக்காடு வாயுக்களுக்கு புதைபடிவ எரிபொருள்களே காரணமாக இருக்கின்றன. இவையே ஒட்டுமொத்த கரிவாயு வெளியேற்றத்தில் 90 விழுக்காட்டு பங்கு வகிக்கின்றது. அந்த வகையில் கரிவாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதற்கு புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதே காலநிலை மாற்ற சிக்கலுக்கு முக்கியத் தீர்வாகும்.


மாறாக, தற்போதைய காலநிலை மாநாட்டில் இதுவரை இல்லாத வகையில் எண்ணெய் எரிவாயு நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று எண்ணெய் எரிவாயு பயன்பாட்டிற்கு எதிரான கருத்துகளுக்கு முட்டுக் கட்டை போட்டனர். அதிலும் குறிப்பாக உலகின் மிகப்பெரும் எண்ணெய் எரிவாயு உற்பத்தி நிறுவனமான அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனத்தின் தலைவரும் ஐக்கிய அரபு நாட்டின் அமைச்சருமான சுல்தான் அல் ஜாபர் அவர்கள், புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டிற்கும் காலநிலை மாற்றத்திற்கும் தொடர்பு இருப்பதாக கூறுவதில் எந்த அறிவியல் உண்மையும் இல்லை என பேட்டியொன்றில் கூறுகிறார். இத்தனைக்கும் இவர்தான் தற்போது துபாயில் நடைபெற்ற மாநாட்டிற்கு தலைமை ஏற்றவர்என்பது குறிப்பிடத்தக்கது.இந்தஒரு உதாரணமே போதும், ஐநாவின் காலநிலை மாநாட்டின் போலியான விவாதங்களையும் தீர்வுகளையும் புரிந்துகொள்வதற்கு!

தற்போதைய தீர்மானத்தின் ஓட்டைகள்:

புதைபடிவ ஆற்றல் பயன்பாட்டை முற்றிலும் தடை செய்யாமல், எண்ணெய் எரிவாயு நிறுவனங்களின் அழுத்தங்களின் பெயரில் வளர்ந்த நாடுகளுக்கு ஆதரவாக இருப்பது.

நிலக்கரி பயன்பாட்டை முற்றிலும் தடை செய்யாமல், குறைவான கரிப்புகை வெளியேற்ற அளவு போன்ற தொழில்நுட்பத் தீர்வுகளை உள்ளடக்கியுள்ளது.

காலநிலை மாற்றத்தால் கடும் பொருளாதார இழப்புகளை எதிர்கொள்கிற ஏழை மற்றும் வளரும் நாடுகளுக்கு, வளர்ந்த நாடுகள் வழங்கும் நிதி உதவி குறித்து திட்டவட்டமாக எந்த வரையறையையும் உருவாக்கவில்லை.




சிறு தீவு நாடுகள் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளை வளர்ந்த நாடுகள் கைவிட்டுவிட்டதாக பாதிக்கப்பட்ட நாடுகள் கருதுகின்றன.

1.5 டிகிரி வெப்ப அதிகரிப்பை கட்டுக்குள் வைக்க எந்த புதிய இலக்கும் முன்வைக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்குகிற நிதி ஆதாரங்களை உயர்த்தவில்லை. காலநிலை மாற்ற சிக்கலுக்கு தகவமைத்து கொள்வது குறித்து விவாதிக்கப்படவும் இல்லை.

மொத்தத்தில் புதைபடிவ ஆற்றல் துறையில் கோலோச்சுகிற கார்ப்பரேட் நிறுவனங்கள் மகிழ்ச்சியாக இத்தீர்மானங்களை வரவேற்றன. வளர்ந்த நாடுகள் தங்களின் பொறுப்புகளை வெற்றிகரமாக மீண்டுமொருமுறை தட்டிக் கழித்துவிட்டன.

நிலக்கரி, எண்ணெய் எரிவாயு போன்ற புதைபடிவ ஆற்றல் பயன்பாடே புவியின் வெப்பநிலை உயர்வுக்கு காரணம் என்று கூறி, நாம் அதன் பயன்பாட்டை குறைத்துக் கொள்ளத் தொடங்கினால் நாம் மீண்டும் குகைக்கு சென்று வசிக்க வேண்டியதுதான் என ஐக்கிய அரபு நாட்டின் அமைச்சர் சுல்தான் அல் ஜாபர் மாநாட்டின் நடுவே பேட்டி ஒன்றில் குறிப்பிடுகிறார். இவரின் இந்த கூற்றானது இன்று புதைபடிவ ஆற்றல் துறையில் லட்சம் கோடிகளில் முதலீடு செய்துள்ள கார்பரேட் பெரு முதலாளிகளின் நலனை உள்ளது உள்ளவாறு வெளிப்படுத்துகிறது. சூழலியல் நோக்கில், முதலாளித்துவ லாப நலன்களுக்காக இயற்கை வளங்களை அழித்து, வாழ்வதற்கே சாத்தியமில்லாத வகையில் புவியை சுடுகாடாக்கி வரும் செயலை அலங்கரிக்கிற சொல்தான் "வளர்ச்சி" என்கிறோம். அதை முதலாளித்துவ நலன்களுக்கான வளர்ச்சி என்கிறோம். லாபத்தின் வளர்ச்சி என்கிறோம்.

இந்தப் போலியான அழிவு வளர்ச்சி வாதத்தை அறிவுள்ள சமூகம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. இப்புவியில் மிகவும் அறிவார்ந்த உயிரினமாக கருதப்படுகிற மனிதன், தனது லாப வெறிக்காக தான் வாழும் புவி எனும் சொந்த வீட்டிற்கே தீவைத்துக் கொள்வதென்பது அவனது அறிவை பணம் வென்று விட்டது என்றே பொருள் கொள்ள வைக்கிறது. அதிலும் குறிப்பாக முதலாளித்துவ சமூக மக்களின் நலன்களுக்காக ஒட்டுமொத்த மக்களும்பிற உயிரினங்களும் பலிகடா ஆக்கப்படுவதை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாதவை.

உலகை காப்பதற்கான முயற்சிகளை முதலாளித்துவ சமூகத்தால் ஒருபோதும் முன்னெடுக்க முடியாது என்பதையே தற்போது நடைபெற்று முடிந்துள்ள சிளிறி28 மாநாட்டு தீர்மானம் வெளிப்படுத்தியுள்ளது. பெரும் கூச்சல் குழப்பமும் தோல்வியுமாக முடிந்த இவ்வகையான மாநாடுகள் குறித்து முன்னாள் பொலிவிய அதிபர் எவோ மோர்லஸ் கூறுவதை இங்கு நினைவுகூர்வது பொருத்தமுடையதாக இருக்கும்.

"நிலவுகிற முதலாளித்துவ அமைப்பே காலநிலை மாற்ற சிக்கலுக்கான அடிப்படைக் காரணியாக இருக்கிறது. நாம் நமது புவியைக் காக்க வேண்டும் என்றால் நடைமுறையில் ஆதிக்கம் செய்கிற முதலாளித்துவ பொருளாதார கொள்கைத் திட்டங்களுக்கு முடிவு கட்டியாக வேண்டும். காலநிலை மாற்றச் சிக்கலை முதலாளித்துவ சமூகமானது கார்பன் வணிகத்திற்கான சந்தை நோக்குடனேயே அணுகுகிறது. நாங்கள் இந்த சந்தை முறையையும் அதை ஊக்கப்படுத்தும் நாடுகளையும் புறக்கணிப்போம்."

தொடர்புக்கு: 9842391963

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய - சர்வதேசிய பங்களிப்பு



மு.வீரபாண்டியன்

**2025 ஆம் ஆண்டு அது தனது நூற்றாண்டை சூழ்ந்து கொள்ளும். எந்த ஒரு நாட்டிலும் நூற்றாண்டு கால கட்சி ஒன்று ஆட்சியில் இருந்திருக்கும் அல்லது தடம் தெரியாமல் அழிந்திருக்கும்.**



இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றவில்லை எனினும் நூற்றாண்டு நெருக்கத்தில் கட்சி அழியவில்லை. எதன் பொருட்டும் அதனை அழிக்க முடியவில்லை.

கட்சி அக்டோபர் புரட்சியால் உந்தப்பட்டு, இந்திய விடுதலைப் போரில் தோன்றியது. 1934, 1948 ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் கட்சியின் மீது இருமுறை தடை விதித்தது. கட்சி அடக்குமுறைகளுக்கு உள்ளானது. இந்த காலங்களில் கட்சி ஆயுதம் ஏந்தி போராடியது. 1948 இல் நேரு அரசாங்கம் கட்சி மீது தடை விதித்தது. இந்திய அரசியல் வரலாற்றில் மூன்று முறை தடையை எதிர்கொண்ட ஒரே கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மட்டும்தான்.

கான்பூர் சதி வழக்கு, மீரட் சதி வழக்கு, பெஷாவர் சதி வழக்கு, நெல்லை சதி வழக்கு என ஏராளமான சதி வழக்குகளை சந்தித்ததும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதான்.

சேலம், கடலூரில் சிறைக்குள்ளயே துப்பாக்கி சூடு, தூக்கு தண்டனை, ஆயுள் தண்டனை என அடக்குமுறைகளையும், சித்திரவதைகளையும் ஏற்றதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதான்.

மதுரை பாலு, மாரி, மணவாளன், பூந்தோட்டம் சுப்பையா, சிவராமன், இரணியன், ஆம்பலாபட்டு ஆறுமுகம், களப்பால் குப்பு, எஸ். ஜி. முருகையன் உயிர் ஈந்ததும், தெலுங்கானா, சின்னியம்பாளையம், புன்னபுரா, வயலார் என நாடு முழுவதும் இரத்த தடாகத்தில் பூத்தெழுந்ததும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதான்.

1946 ல் துவங்கி 1951 வரை உழவு மக்களை அணி திரட்டி, அரசியல் படுத்தி, ஆயுதம் தரித்து நிஜாமின் ரசாக்கர் படையை எதிர்த்து நின்ற வரலாறும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதான். நேரு, பட்டேலின் தலைமையிலான ராணுவத்தை எதிர்த்து நின்றதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதான்.

தெலுங்கானா ஆயுதப்போரில் கிராம அரசு ஒன்றையும் நிறுவியது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. உண்மையில் கிராம ராஜ்யம் எப்படி இருக்க வேண்டும் என்பதின் துவக்கம் அது.

10 லட்சம் ஏக்கர் நிலத்தை நில பிரபுக்கள், மன்னர்களிடமிருந்து பறித்து, நிலமற்ற ஏழை உழைப்பாளிகளுக்கு பகிர்ந்தளித்ததும், இந்தியாவில் நில பங்கீட்டு முறையை துவக்கியதும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிதான். தெலுங்கானா விடுதலைப் போரின் மறுக்க முடியாத ஓர் வீர காவியம்.

இந்திய விடுதலைப் போரில் தான் ஒரு மெய்யான இந்திய தேசியம் கட்டமைந்தது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மகத்தான பங்கு பணி ஆற்றியது.

கதார் இயக்கம், நவஜீவன் இயக்கம், இந்துஸ்தான் ராணுவ சோசியலிஸ்ட் குடியரசு என ஆயுதப் போராட்டங்களிலும் இந்திய தேசியத்தை கட்டமைக்க உதவின.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைகளுக்காகவும் குரல் எழுப்பியது.

27.12.1925 அன்று கான்பூர் மாநாட்டில் தோழர் ம.சிங்காரவேலரின் உரையில் ''முழுமையான சுயநிர்ணயம்'' குறித்து பேசி இருக்கிறார்.

அதேபோல மொழிவழி மாநிலங்கள் உருவாக்கம். இதற்கான இயக்கங்களை கேரளாவில், மகாராஷ்டிராவில், ஆந்திராவில், தமிழ்நாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்தியதை நாடறியும்.

சொந்த நாடு அதன் தேசியம் தேச பற்று இவைகள் தேசிய வெறியாக மாறி விடாமல் ஒற்றுமை, ஒருமைப்பாட்டை முன்னெடுத்தது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

மொழியாக, சாதியாக, மதமாக, தேசியமாக மக்கள் ஒற்றுமையை கெடுக்கும் அனைத்து காரணிகளையும் உழைக்கும் மக்கள் ஒற்றுமை எனும் வர்க்க அரசியலால் ஒன்றிணைத்தது கட்சி.

கட்சி தோன்றியதிலிருந்து இன்று வரை அது பாட்டாளி வர்க சர்வதேசியத்தை பற்றி நிற்கிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது லெனினது சிந்தனை போக்கின் முதல் அம்சம். தேசியம், தேசிய விடுதலை, தேசிய இன உரிமை இவை யாவும் சர்வதேசியத்தின் ஒத்திசைவு என்றார் அவர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவின் அருகாமை நாடுகளின் விடுதலை இயக்கங்களை ஆதரித்தே வந்துள்ளது.

சீனாவின் மக்கள் விடுதலை இயக்கம், வியட்நாம் விடுதலை இயக்கம், நேபாளம் விடுதலை இயக்கம், கியூபா, பாலஸ்தீனம் உள்ளிட்ட அனைத்து விடுதலை இயக்கங்களையும் ஆதரித்து வந்துள்ளது.

இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப்பின், இரு நாடுகளுக்கும் அரசியல் தீர்வு தான் வழி என பிரகடனப்படுத்தியது. கட்சி இராணுவ தீர்வை எப்போதும் ஆதரித்ததில்லை.

அதே போல் கட்சி ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) உடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தது. கியூபா விடுதலை, பாலஸ்தீன விடுதலை இயக்கம் (PLO), வியட்நாம் விடுதலை என அனைத்து இயக்கங்களோடும் தோழமையும், உறவும் கொண்டிருந்தது.

ஏகாதிபத்தியங்களின் கூட்டமைப்பு நேட்டோ உருவானபோது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி "வார்சா" சோசியலிச ஒப்பந்தங்களை ஆதரித்தது.

உலக வல்லரசுகளுக்கு மாற்றாக பிரிக்ஸ் (BRICS) அமைப்பு முன் எழுவதை கட்சி ஆதரிக்கிறது.

இப்படி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோன்றிய நாள் முதல் இந்திய நாட்டின் தேசியத்திற்கும், பாட்டாளிகளின் சர்வதேசியத்திற்கும் எப்போதும் பங்காற்றி வந்துள்ளது. இனியும் இந்த புரட்சிகர அறிவியல் பயணம் தொடரும்.

# கம்யூனிஸ்ட் கட்சியும் பெண்களும்



மு.கண்ணகி

மகாகவிஞர்களின் உள்ளங்களை எல்லாம் மலர செய்த சொல்.

**''முப்பது கோடி ஜனங்களின் சங்கம்**
**முழுமைக்கும் பொதுவுடமை**
**ஒப்பில்லாத சமுதாயம்**
**உலகத்துக்கு ஒரு புதுமை"**
– என்றான் பாரதி.

**"பொதுவுடமை கொள்கை திசையட்டும் சேர்ப்போம் புனிதமோடதை எங்கள் உயிர் என்று காப்போம்"** – என்றான் பாரதிதாசன்.

பொதுவுடைமை என்ற உத்வேக சொல், உலகின் அனைத்து நாடுகளிலும் எதிரொலித்தது. ரஷ்யாவில் வெடித்த கம்யூனிஸ்ட் புரட்சி உலகை குலுக்கியது. தனி உடமை ஒழித்து பொதுவுடமை படைக்க உலகெங்கும் புரட்சி இயக்கம் உலகெங்கும் பரவியது.

**"உலக முதலாளிகள் அஞ்சி நடுநடுங்கட்டும்"** – என்றார் மார்க்ஸ்.

உலக மக்கள் விடுதலைக்கு போராடிய கம்யூனிஸ்டுகள் மீது சொல்லொணா அடக்குமுறைகள். இந்திய விடுதலைப் போராட்டத்தில் ரத்தம் சிந்திய கம்யூனிஸ்ட்கள் சிறைக்கொடுமை, சித்திரவதைகள். துப்பாக்கி குண்டுகள், தூக்கு மேடைகள், பெஷாவர், கான்பூர், மீரட் போன்ற எண்ணற்ற சதி வழக்குகள் சொல்லொணா கொடுமைகள், துன்பங்கள், துயரங்கள். மக்கள் விடுதலைக்கு போராட்டக்களங்கள் போன்றவற்றை வாழ்க்கையாக்கி கொண்டது கம்யூனிஸ்ட் கட்சி.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முதல் மாநாட்டில் சிங்காரவேலர் தலைமை உரையில் தேசத்தில் நடைபெறும் சுயராஜ்யப் போராட்டத்தில் முன்னணியில் நிற்க வேண்டும், தீண்டாமையை ஒழிக்க வேண்டும், தொழிலாளர் நல சட்டங்களால் தொழிலாளர்களும், குடியானவர்களும் சுரண்டப்படுவதை தடுக்க வேண்டும், எல்லா அரசியல், பொருளாதார உறவுகளிலும், சாதி, சமயம் பற்றிய எல்லா வேற்றுமைகளையும் ஒழிக்க வேண்டும். இவை நமது நேரடி நோக்கமாகும் என்றார்.

இன்றைக்கு 99 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இன்றும் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி மதவாத, வகுப்புவாத சக்திகளிடமிருந்தும் கார்ப்பரேட் முதலாளிகளின் பிடியிலிருந்தும், இந்தியாவை பாதுகாக்க, மக்களின் வாழ்வாதார உரிமைகளை பாதுகாக்க, போராடி பெற்ற உரிமைகளை பாதுகாக்க, இரத்தம் சிந்தி பெற்ற சுதந்திரத்தை, இறையாண்மையை, ஜனநாயகத்தை, அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்க தொடர்ந்து போராடி வருகிறது. தமிழகத்திலும் மக்கள் பிரச்சினைகளுக்கு தொடர்ந்து போராடி வருகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்திலும், பெண்கள் உரிமை, வேலையில் சம உரிமை, சமமான கூலி, நிலம் மற்றும் சொத்துக்களில் உரிமை, வாக்குரிமை, கல்வி, திருமணம், மகப்பேறு உரிமை, விடுப்பு சலுகைகள், தாய், சேய்நல அரசாங்க பாதுகாப்பு, பெண்களுக்கு எதிரான கொடுமைகள், தடுப்பு உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளிலும் போராட்டங்களை தொடர்ந்து பெண்கள் நடத்தி வந்திருக்கிறார்கள்.

இவை உழைப்பாளிகளின் ஜனநாயக மத சார்பற்ற குடியுரிமைக்காகவும், அமைதிக்காகவும் நடத்தப்படும் போராட்டங்களிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாதவை. நம் பெண்கள், குழந்தைகள், ஏழை, எளியோரின் வாழ்க்கை தரமும் மகிழ்ச்சியும் நிரம்பியதாக ஆக்குவதற்கு உதவுகிற வகையில் அமையும் பெண் கல்விக்காக சாவித்திரிபாய் பூலே,



முத்துலட்சுமி ரெட்டி போன்றவர்கள் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

தொடக்க காலத்தில் இருந்தே என். எப். ஐ. டபிள்யு. எல்லாவித அமைப்புகளுடனும் ஒருமித்து பொதுவானதொரு தளத்திலிருந்து கருத்துக்களுக்காக ஒன்றுபட்டு போராடுவதை வலியுறுத்தி வந்துள்ளது. கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டங்களில் ஆண்களுக்கு இணையாக பெண் தலைவர்கள் போராடினர். பிரிட்டிஷ் ஆட்சியில் தலைக்கு விலை வைத்த அருணா ஆசப் அலி, ஆயுதம் தாங்கி போராடிய கல்பனா தத், இட ஒதுக்கீடு சட்டத்தை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்த கீதா முகர்ஜி, தாரா ரெட்டி, விமலா பரூக்கி உள்ளிட்ட பல தலைவர்கள், தமிழகத்தில் மீனாட்சி சுந்தரம்மாள், மணியம்மை, பார்வதி கிருஷ்ணன், கே. பி. ஜானகி அம்மாள், ஜனகம் இஸ்மாயில், கோமதி கண்ணப்பன், புதுச்சேரி சரஸ்வதி சுப்பையா, செங்கொடி காத்த சிகப்பி உள்ளிட்ட பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு தலைவர்கள் உரிமைக்கான போராட்டங்களில் அர்ப்பணிப்பு உணர்வுடன் போராடியிருக்கிறார்கள்.

இந்தியாவில் இன்றைய அரசியல் சூழலில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வருகிறது. பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக மாறி வருகிறது. மீண்டும் பழமைவாத பிற்போக்குத்தனமான மூட பழக்க வழக்கத்திற்கு, பெண் அடிமைத்தனத்திற்குஇழுத்துச்செல்லும் கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஆட்சியாளர்களால் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அதிகரிக்கும் சூழல் உள்ளது.

இந்த நிலையை மாற்றிட, பெண் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திட, பெண்களை தத்துவ ரீதியாக, அரசியல் ரீதியாக வென்றெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

கட்சி அமைப்பு தினத்தன்று பெண்களை அணி திரட்டுவோம்! பெண்ணுரிமை காப்போம்! பாலின சமத்துவம் பெறுவோம்! அதற்கான திசை வழியில் பயணிப்போம்! என சூளுரைப்போம்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 23.12.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57


# தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர்கள் சங்கம்

# TAMILNADU RURAL DEVELOPMENT LABOURS UNION

**(AITUC-யுடன் இணைப்பு)**





- காலி பணியிடங்களை நிரப்புதல் : குடிநீர் மேல்நிலைத் தொட்டி இயக்குபவர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் பணியிடத்தில் தற்போது பணிபுரியும் தற்காலிக ஊழியர்களையும் இணைத்து காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும்.
- பதவி நீக்கம் செய்யப்பட்ட தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மாவட்ட, வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிலை ஊழியர்களையும் மீளபணியமர்த்த வேண்டும்.
- குடிநீர் மேல்நிலைத் தொட்டி இயக்குபவர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி வெளியிடப்பட்ட அரசாணை 2 (D) எண் 62 தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் : 11-10-2017ன் படி மாத ஊதியம் ரூ.13848/-க்கு குறையாமல் கால முறை ஊதியமும், பணிக்கொடை, ஓய்வூதியம், வாரிசு வேலை மற்றும் பதவி உயர்வு வழங்க வேண்டும்.
- தூய்மை பணியாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி மாத ஊதியம் ரூ.11848/-க்கு குறையாமல் கால முறை ஊதியமும், வாரிசு வேலை, பதவி உயர்வு வழங்க வேண்டும்.
- தூய்மை காவலர்கள் / பள்ளி சுகாதார தூய்மைப் பணியாளர்கள் / தூய்மை பாரத இயக்க ஊக்குவிப்பாளர்கள் ஆகியோர்களுக்கு குறைந்தபட்ச கூலி சட்டத்தின்படி மாத ஊதியம் ரூ.11848/-க்கு குறையாமல் கால முறை ஊதியமும், ESI, PFயும் வழங்க வேண்டும்.
- தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மாவட்ட, வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கு காலமுறை ஊதியம் : ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறையில் ஏற்படும் நிரந்தர காலி பணியிடத்தில் 20% ஏற்கனவே இத்துறையில் பல பிரிவு ஊழியர்களுக்கு வழங்கியது போல் இவர்களுக்கும் கால முறை ஊதியம் வழங்கிட வேண்டும்.
- அனைத்து திட்ட கணினி இயக்குபவர்களுக்கும் சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்களுக்கு இணையான ஊதியம் ரூ.30,000/- மாத சம்பளமாக வழங்கிட வேண்டும்.
- சமூக தணிக்கையாளர்களுக்கு மீண்டும் பணி வழங்கி பணி பாதுகாப்புடன் சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாட்டை அமுல்படுத்த வேண்டும்.
- மகளிர் திட்ட ஊழியர்கள் அனைவருக்கும் சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அவரவர் பணிக்கு நிகரான ஊதியம் வழங்கிட வேண்டும்.



# "லட்சம் பேர் பங்கேற்கும்"
# லட்சிய முதல் மாநில மாநாடு

**நாள் : 07.01.2024 பிற்பகல் 3 மணி இடம் : அங்கு விலாஸ் ஹெலிபேடு மைதானம் (மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்), திண்டுக்கல்.**





தலைமை : திரு. **மு.இராமாநிதி** மாநில தலைவர் TNRDLU

வரவேற்புரை : தோழர்.**ஏ.பி.மணிகண்டன்** வரவேற்பு குழு தலைவர் AITUC மாவட்ட துணை தலைவர்

துவக்க உரை : தோழர். **எம். ராதாகிருஷ்ணன்** மாநில பொதுச்செயலாளர் AITUC

கோரிக்கைகள் விளக்க உரை : திரு. **பெ. கிருஷ்ணசாமி** மாநில பொதுச்செயலாளர் TNRDLU, மாநில தலைவர் TNVTSSA

தீர்மானங்கள் முன்மொழிதல் : **TNRDLU & TNVTSSA** மாநில நிர்வாகிகள்

**விழா பேருரை**

மாண்புமிகு அமைச்சர் **இ.பெரியசாமி** B.A., B.G.L., அவர்கள்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை.





**விழா சிறப்புரை**

மாண்புமிகு அமைச்சர் **அர.சக்கரபாணி** B.A., அவர்கள்
உணவு மற்றும் உணவு பொருட்கள் வழங்கல் துறை.

தோழர் **இரா.முத்தரசன்** மாநில செயலாளர் - CPI அவர்கள்

தோழர் **T.M.மூர்த்தி** தேசிய செயலாளர் - AITUC அவர்கள்

**வாழ்த்துரை**

மதிப்புமிகு.**பா.பொன்னையா** இ.ஆ.ப., அவர்கள்
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை.

மதிப்புமிகு.**மொ.நா.பூங்கொடி** இ.ஆ.ப., அவர்கள்
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல்.

மாண்புமிகு. **ஐ.பி.செந்தில்குமார்** M.A., B.L., MLA - பழனி,
சட்டமன்ற மதிப்பீட்டுக்குழு உறுப்பினர் அவர்கள்.

தோழர். **க.சந்தானம்** அவர்கள்
CPI – தேசியக் குழு உறுப்பினர்.

தோழர். **க.மாரிமுத்து** அவர்கள் MLA - திருத்துறைப்பூண்டி

**நன்றியுரை** திரு. **ஜி. ராஜேந்திரன்** மாநில பொருளாளர் TNRDLU.

**இவண்: வரவேற்புக்குழு TNRDLU திண்டுக்கல் மற்றும் TNRDLU & TNVTSSA மாநில மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள்**


Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.